# விடுதலைப்புலிகள்

குரல் 44 | கார்த்திகை - 1993 | அன்பளிப்பு ரூபா 5/-


# விஜேதுங்கா அரசின் கொள்கை தோற்கடிக்கப்பட்டுவிட்டது

பூநகரி கூட்டுத்தளம் மீதான பெருந்தாக்குதலும் அதில் - புலிகள் இயக்கம் பெற்ற பெரு வெற்றியும் இனப்பிரச்சினை தொடர்பான விஜேதுங்கா அரசின் கொள்கையையும் - நடைமுறையையும் கேலிக்கூத்தாக்கியுள்ளன. அத்துடன், பேரினவாதிகளின் இராணுவ மமதைக்கும் பலத்த அடி விழுந்துள்ளது.

"இனப்பிரச்சினை என்ற ஒன்றில்லை; பயங்கரவாதப் பிரச்சினைதான் உண்டு" என்ற டி. பி. அரசின் அரசியல் நிலைப்பாடும் இராணுவ பலத்தின்மூலம்தான் தமிழர் பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டும் என்ற அதன் இராணுவ அணுகுமுறையும், இப்போது புஸ்வாணம் ஆகிவிட்டன.

யதார்த்தம் புரியாத பேரினவாதிகளும் - அதிகாரப்பசி கொண்டலையும் அரசியல் - இராணுவத் தலைவர்களும் இந்தப் புதிய பாடத்தை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், 2000 படையினரைக் கொண்டிருந்த பூநகரிக் கூட்டுத்தளம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட நிகழ்வை ஆய்வு செய்யும் ஒருவர், புலிகள் இயக்கத்தை இராணுவரீதியாகத் தோற்கடிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை எடுப்பது மட்டுமல்லாது, சிங்களப் படை தோல்வியின் பாதையில் செல்லத் தொடங்கிவிட்டதா என்ற சந்தேகத்தையும் வெளிப்படுத்துவார்.

புலிகள் இயக்கத்தின் பலத்தையும், தமிழ் மக்களின் சுதந்திர தாகத்தையும் தவறாக எடைபோட்ட சிங்களப் பேரினவாதத் தலைமை, 1994 முடிவுக்குள் "அனைத்தையும் நசுக்கிவிடலாம்" என்று கருதி. ஒரு நாசகாரத்திட்டத்தை வரைந்து வைத்திருந்தது.

இந்த மழைக்காலம் முடிந்ததும் தொடங்க இருந்த அந்த நாசகாரத்திட்டத்தால் 'என்ன நடக்குமோ?' என்று தமிழ் மக்களிடம் குடிகொண்டிருந்த அச்சமும் - ஏக்கமும், பூநகரித் தாக்குதலின் பின், சிங்கள தேசத்திடம் கைமாறிவிட்டது.

பூநகரியில் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களும், அங்கே படையினர் சந்தித்த பாரிய உயிரிழப்பும், 'தவளை' இராணுவ நடவடிக்கைமூலம் புலிகள் வெளிப்படுத்திய போர்த்திறனும் இராணுவப் பிரக்ஞை உள்ள அனைத்து சிங்களவர்களையும் நிச்சயம் அச்சத்தில் ஆழ்த்தும். குறிப்பாக சிங்களப் படைவீரர்கள் மத்தியில் இது பெரிய குழப்பத்தை உண்டு பண்ணி, போரில் வெல்லலாம் என்ற நம்பிக்கையைக் கடுமையாகச் சிதைத்துவிடலாம்.

இந்த நம்பிக்கைச் சிதைவு' சிங்கள இராணுவ இயந்திரத்தை ஒட்டுமொத்தமாகப் பாதிக்கலாம்.

இதே போன்றதொரு நம்பிக்கைச் சிதைவுதான் 1988 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் - 'ஒப்பறேசன் செக்மேற்'றிற்குப் பின் - இந்தியப்படைக்கு ஏற்பட்டிருந்ததை இங்கு ஞாபகம் கொள்ளலாம்.

இருந்தாலும் சிங்களப் படைவீரர்களை உற்சாகப்படுத்த →

## உள்ளே


- பூநகரி தளம் மீது புலிகள் வீசச்செய்த புயல்.
- 'தவளை' இராணுவ நடவடிக்கையும் போராட்டத்தின் புதிய பரிமாணமும்.
- எனது மக்களின் விடுதலைக்காக...
- விதைக்கப்பட்டது வீரமும் தான்.
- காந்தரூபன் அறிவுச்சோலை.
- தி. மு. க வில் பிளவு: ஒரு பிராமணியச் சதி.
- வீட்டுக்கு வேலி அல்ல; நாட்டுக்கு எல்லை வேண்டும.
- தமிழர் திருநாள்.




பூநகரியில் புலிகள்: எதிரியின் பாசறை எங்கே?...... பிரபாகரன் பிள்ளைகள் அங்கே!

# 'தவளை' இராணுவ நடவடிக்கையும் போராட்டத்தின் புதிய பரிமாணமும்

புலிகளின் குரல்

சிங்கள தேசத்து இராணுவ வரலாற்றில் ஒரு அத்தியாயம் இரத்தமாகவே காட்சியளிக்கப் போகின்றது.

குடாநாட்டு மக்களின் மனங்களை ஆட்டிப்படைத்த, குடாநாடு மீதான இராணுவ முற்றுகையைப் பற்றிய பயமும்; சிங்களத் தளபதிகளை ஆட்கொண்டிருந்த குடாநாடு மீதான முற்றுகையைப் பற்றிய பேராசையும், பூநகரித் தாக்குதலுடன் ஆட்டங்கண்டுவிட்டன.

10. 11. 1993 அன்று நள்ளிரவு, இடியெனப் புகுந்த புலிவீரர்களால் தகர்க்கப்பட்டது பூநகரி கூட்டுத்தளம் மட்டுமல்ல; தமிழர்களை இராணுவ ரீதியாக அடிபணியச் செய்துவிடலாம் என்ற சிங்களப் பேரினவாதிகளின் நம்பிக்கையும் தகர்ந்து போய்விட்டது.

ஒரே எத்தனிப்பில் சுமார் 800 படையினரைக் கொன்று, ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுதங்களையும், மலைப்பை ஏற்படுத்தும் அளவு வெடிமருந்துகளையும் கைப்பற்றியதென்பது, உலகமே ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு இராணுவ சாதனைதான். புலிகள் இயக்கம் படைத்த இந்த ஒப்பற்ற இராணுவ சாதனை, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இராணுவரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது.

வரலாற்றுப் புகழை அடைந்துவிட்ட இப்பெருந் தாக்குதலில் ஒரு டாங்கியையும், ஐந்து நீருந்து விசைப்படகுகளையும். 120 மி. மீ. பீரங்கிகளில் நான்கையும், 50 கலிபர் துப்பாக்கிகளில் பதின்மூன்றையும், மற்றும் இயந்திரத் துப்பாக்கிகள், மோட்டர்கள், ஆர். பி. ஜிகள்...... என்று நூற்றுக்கணக்கான கனரக ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தக் கனரக ஆயுதங்களும்–அவற்றிற்கான வெடிமருந்துகளும் புலிகளின் ஆயுத பலத்தை ஓரிரு இரவுகளுக்குள் பெரியளவில் அதிகரிக்கச் செய்துவிட்டன.

இந்த ஆயுத பலம் புலிகள் இயக்கத்தின் இராணுவ வலிமையையும்-போரிடும் திறனையும் உயர்த்தி உள்ளது.

குறிப்பாக நாகதேவன்துறை – ஞானிமடம் கடற்படைத்தளத்திலிருந்து கைப்பற்றப்பட்ட நீருந்து விசைப்படகுகளும், 'றாடர்'களும், மற்றும் சாதனங்களும் கடற்புலிகளுக்கு பெரும் பலத்தைக் கொடுத்துள்ளன. இதனால், கடற் சண்டைகளில் இனிமேல் திடீர்த்திருப்பங்கள் ஏற்படலாம். அதேவேளை, இன்னும் பல வருடங்களுக்குத் தொடர்ச்சியான போரில் ஈடுபடுவதற்குரிய படைக்கல சக்தியையும் பூநகரியிலிருந்து புலிகள் பெற்றுள்ளனர்.

மறுபுறத்தில் பூநகரிப் பேரிழப்பு சிங்கள இராணுவ இயந்திரத்தின் உயிர் நாடியை உலுக்கிவிட்டுள்ளது.

தாங்கமுடியாத உயிரிழப்புகளால் எழுந்த சோகம் ஒரு புறம்; பலகோடி ரூபா பெறுமானமுள்ள புதிய படைக்கலன்கள் புலிகளின் கைகளிற்குப் போய்விட்டனவே என்ற அச்சம் மறுபுறம்; இந்தப் போரை இனி எப்படிக் கையாள்வது என்ற பதற்றம் இன்னொரு புறமுமாகச் சிங்களப் பேரினவாதம் திக்குமுக்காடியுள்ளது.

இப்போது சிங்களப் படைத்துறையின் உயர் தளபதிகள் எண்ணுவதெல்லாம், சிதைந்துபோயுள்ள இராணுவத்தின் போரிடும் உறுதியை எப்படிச் செப்பனிடலாம் என்பதைப் பற்றியதாகவே இருக்கும்.

அதில் ஒரு தந்திரோபாயமாகத்தான் வைத்தியசாலைகள், கோயில்கள் மற்றும் பொதுமக்களின் நிலைகள்மீது கண்மூடித்தனமான ஆகாயத் தாக்குதல்களை நடாத்தி சிங்களப் படைவீரர்களை உற்சாகப்படுத்த முயன்றபடியுள்ளனர்.

ஆனாலும் இந்த மிலேச்சச்செயல்கள் உலகளாவியரீதியில் தமிழரின் போராட்ட நியாயத்தை மேலும் பலப்படுத்தவும், தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கும் வண்ணம் சர்வதேச சமூகத்தைத் தூண்டவும்தான் உதவும் என்பதே, உண்மை.

ஒட்டுமொத்தமாக பூநகரித் தாக்குதலில் புலிகள் பெற்ற வெற்றி, போராட்டச் சக்கரத்தை வேகமாக நகர்த்தியுள்ளது. அத்துடன் ஆயுதப்போரின்மூலம் சிங்களப்படையை அழித்தொழித்து, தமிழீழத்தை மீட்டெடுத்து ஒரு தனி அரசை நிறுவலாம் என்ற பெரு நம்பிக்கையை, தமிழீழ மக்களுக்குக் கூறியுமுள்ளது. ○

# விஜேதுங்கா...

வும், சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தவும் இராணுவத் தலைமை கடுமையாக முயற்சிக்கும் என்பதும் தெளிவு.

இதன்பொருட்டு புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சில பகுதிகள்மீது, குறிப்பாக குடாநாட்டின் சில பகுதிகள்மீது படையெடுத்துத் தமிழ் மக்களது உயிருக்கும் – உடைமைகளுக்கும் பாரிய சேதங்களை உண்டு பண்ணிவிட்டு மீண்டும் முகாம்களுக்கே திரும்பிவிடும் கொலைகார உத்தியை, சிங்களப் படைத்துறைத் தலைமை கையாளலாம். அதே வேளை கண்மூடித்தனமான வான் – கடல்வழி குண்டுத் தாக்குதல்களையும் மக்கள் குடியிருப்புகள்மீது தொடர்ந்து நடாத்தலாம்.

இதைக் கருத்திற்கொண்டு, பதுங்குகுழிகளை அமைத்து தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும்படி மக்களைக் கோருவதுடன், சிங்களப்படையின் கொலைகாரத்திட்டத்தை முறியடிக்க ஆயுதமேந்தும்படி, இளைஞர்களையும் இளம்பெண்களையும் புலிகள் அறைகூவி அழைக்கின்றனர்.

இதேவேளை, வடக்கு – கிழக்கில் உண்மையில் என்ன நடைபெறுகின்றது என்பதைச் சரியாக அறியாதிருந்த சாதாரண சிங்கள மக்களுக்கு, பூநகரியில் இராணுவத்தின் சாவுச் செய்திகள் கண்களைத் திறக்க வைத்திருக்கும் என்று கருதலாம். இதுகாரணமாக பொய்கள் கூறி, பண ஆசைகாட்டி கிராமப்புறச் சிங்களவர்களிடமிருந்து படைக்கு ஆட்சேர்க்கும் அரசின் முயற்சி பெரிதும் பாதிக்கப்படலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ் இனத்திற்கெதிராகப் போர்வெறியூட்டி, சிங்கள மக்களது கவனத்தைத் தம்பக்கம் கவர்ந்த டி. பி. விஜேதுங்காவும், சிசில் வைத்தியரத்னாவும் இப்போது, பொய்யர்களாக – நம்பிக்கையற்ற தலைவர்களாக சிங்கள மக்கள் முன் காட்சிகொடுக்கின்றார்கள்.

இதுகாரணமாக, அடுத்த ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்டு, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியாக மாற வேண்டும் என்ற டி. பியின் ஆசையும், துட்டகைமுனு போல தமிழர்களை வென்று, 'ஹீரோ'வாகக் காட்சிகொடுக்க வேண்டுமென்ற சிசிலின் கனவும், ஈழத்தமிழரது தொன்மையின் இருப்பிடங்களிலொன்றெனக் கருதப்படும் பூநகரியிலேயே புதையுண்டு போகலாம்.

இவை ஒருபுறமிருக்க, சிறீலங்காவிலும் – மலையகம் உட்பட வாழும் தமிழர்களை நேரடியாகவே பகைத்துக் கொண்ட டி. பியின் முட்டாள்தனத்திற்கு மாறாக, அவர்களது வாக்குகளை அள்ளிச் செல்லும் ஒரே நோக்கத்தை மனதிற்கொண்டு சிறிமாவோ அம்மையார், ''இனப்பிரச்சினை உண்டு; அது தீர்த்து வைக்கப் படவேண்டும்'' என்று, முதலைக் கண்ணீர் விட்டுள்ளார்.

அதேவேளை பூநகரியில் சிங்களப்படை சந்தித்த பேரிழப்புடன், ''சிங்களதேசம் தனது முழுக்கவனத்தையும் போரிலேயே செலுத்தவேண்டும்'' என்று தனது உண்மை முகத்தையும் காட்டி, தான் மாறவில்லை என்பதைச் சிங்கள மக்களிடம் நிரூபித்துமுள்ளார்.

சிங்கள மக்களின் ஏமாளித்தனங்களும் சிங்கள அரசியற் தலைவர்களின் கோமாளித்தனங்களும் இருக்கும்வரை, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை அமைதிவழிமூலம் தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கை, தமிழ்மக்களிடம் தோன்றப் போவதில்லை.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இராணுவ அணுகுமுறை பயன்தராது என்ற பாடத்தைப் பூநகரித் தாக்குதலுடன் படித்துக் கொள்ளும் சிங்கள அரசு, தனது பிடிவாதக் கொள்கையையும் மாற்றும் என்று பலர் எதிர்பார்த்தனர். ஆனால் சிங்களப் பேரினவாதிகள் கூட்டுச் சேர்ந்து போரைத் தீவிரமாக்க வேண்டும் என்றே குரலெழுப்புகின்றனர்.

யதார்த்தம் புரியாத இந்தப் பேரினவாதக் குரல்கள், சமாதான வழிமுறைகளைக் கைவிட்டுவிட்டுப் போர்க்களத்தையே சுற்றிச்சுற்றி வட்டமிடுகின்றன.

எது எப்படியிருந்தாலும் பூநகரித் தாக்குதலில் புலிகள் இயக்கம் பெற்ற வெற்றி, தமிழீழ மக்கள்மத்தியிலும், உலகெங்கும் வாழும் எமது மக்கள் மத்தியிலும் ஒரு நம்பிக்கை ஒளியைக் கொடுத்துள்ளது என்பது, மறுக்கமுடியாத உண்மை.

போராட்டத்தின் இறுதிவெற்றியில் நம்பிக்கை குறைந்திருந்த பலர் - குறிப்பாக வெளிநாடுகளில் வசிப்பவர்கள் – இப்பெரு வெற்றியுடன் புத்தூக்கமும் புதிய நம்பிக்கையும் பெற்றிருப்பர்.

இதனால் எமது விடுதலைக் குரல் சர்வதேச சமூகத்தின் முன் மேலும் ஓங்கி ஒலிக்கும் என, எதிர்பார்க்கலாம்.

இவை எல்லாவற்றையும் ஒப்புநோக்கிப் பார்க்கும்போது பூநகரித்தாக்குதலில் புலிகள் இயக்கம் பெற்ற பெருவெற்றியானது எமது போராட்ட வரலாற்றில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுக்கொள்ளும் என்பது உறுதி. ○

# பூநகரி கூட்டுத்தளம் மீது புலிகள் வீசச்செய்த புயல்

**10.11.1993** நள்ளிரவுகடந்தநிலையில் பூநகரிகூட்டுத்தளம் மீது புலிகள் நடாத்திய பிரமிப்பூட்டும் பாரிய தாக்குதலில், பலநூற்றுக்கணக்கான சிங்களப்படையினர் பலியாகிவிட்டனர். தாக்குதலை வெற்றிகரமாக முடித்துவிட்டு, கைப்பற்றிய ஆயுத தளபாடங்களுடன் புலிகள் வெளியேறியபின் பூநகரி கூட்டுத்தளம், சுப்பசொனிக்கின் குண்டு வீச்சுக்கு இலக்கான வீடுபோலச் சின்னாபின்னமாகிக் கிடந்தது. கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கை ஏறக்குறைய ஆயிரமாகஇருக்கலாம் என்று, உலகச் செய்தி நிறுவனங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன. இப் பெரும் தாக்குதலில் புலிவீரர்கள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் எண்ணிக்கை, சிங்களப் பேரினவாதிகளைக் கனவிலும் அச்சுறுத்தக்கூடிய அளவுக்குப் பெருந்தொகையானதாகும்.

ஆயுதப் போரில் சடுதியான திருப்பத்தையும், விடுதலைப் போராட்டத்தில் ஒரு புதிய பரிமாணத்தையும் ஏற்படுத்தியுள்ள இப்பெரும் தாக்குதல், புலிகள் இயக்கத்தின் பலத்தையும் ஆற்றலையும் அளவிடும் ஒரு தராசாகவும் அமைந்துவிட்டது.

ஒரே சமயத்தில் தரைமூலமும் – கடல்மூலமுமான தாக்குதல் திட்டங்களையும், அதேவேளை தரையிலும் – கடலிலுமான சண்டைகளையும் கொண்ட இப்பெரும் தாக்குதலுக்கு, ஈரூடக உயிரினமான தவளையின் பெயர் சூட்டல் பொருள் பொதிந்ததாக அமைந்துள்ளது.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை கடல் நடவடிக்கைகளை வழிநடாத்த, மூத்த தளபதி திரு. சொர்ணம் தரை நடவடிக்கைகளை வழிநடாத்த, இவை இரண்டையும் ஒருங்கிணைத்து இப்பெருந் தாக்குதலை மூத்த தளபதி திரு. பொட்டு அவர்கள் செயற்படுத்த, தலைவர் பிரபாகரன் அவர்கள் இந் நடவடிக்கையை நெறிப்படுத்தித் தலைமைதாங்கினார்.

இப்பெருந் தாக்குதலில் முல்லை, வன்னி, மன்னார், யாழ்ப்பாணம் என்று வடதமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களினதும் சிறப்புத் தளபதிகளும், மகளிர் படையணியின் சிறப்புத் தளபதியும் அணித்தலைவர்களாகக் கலந்துகொண்டு தாக்குதலில் பங்கேற்றனர். இதில் முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி லெப். கேணல் அன்பு வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். அதேவேளை மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டத்தின் பெரியதொரு படையணி தளபதி கருணா தலைமையில் இத்தாக்குதலில் முக்கிய பங்கேற்று சிறப்பாகப் பணியாற்றியுள்ளது.

இந்த ஈரூடகத் தாக்குதலில் கடற்புலிகளின் பங்கும் பணியும் குறிப்பிடும்படியாக இருந்தது. கடற்படையின் நகர்வுகளையும் அதன் அசைவியக்கத்தையும் தடுத்து நிறுத்திய தளபதி சூசையின் தலைமையிலான கடற்புலிகள், இம் முகாம்தாக்குதலின் வெற்றிக்குப் பெரும் பங்காற்றினர். கடற்கரும்புலிகள் மேஜர் கணேஸ், மேஜர் கோபி ஆகியோர், இதற்கு உறுதுணையாக உரம்சேர்த்துவிட்டு வீரச்சாவடைந்தனர்.

## ‘தவளை’ இராணுவ நடவடிக்கை

*பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதலிற்கு ‘ஒப்பறேசன் தவளை’ என்று தலைவர் அவர்கள் பெயர் சூட்டியுள்ளார்.*

*இப்பெயர்சூட்டல், இத்தாக்குதல் நடவடிக்கைக்குரிய போருபாயத்தின் சாரத்தைத் துல்லியமாகவும், அழகாகவும் வெளிப்படுத்துகின்றது.*

*தரைவழிமூலமும் கடல்வழிமூலமும் சந்தடியின்றி நகர்ந்துசென்று, மிகவேகமாக குறித்த இலக்கைத் தாக்கி அழிப்பதுதான் இப்பெரும் தாக்குதலின் போர்முறைத் திட்டமாகும். அதேவேளை, கடலிலும் தரையிலும் தனித்தனி சண்டைகளையும் கொண்ட ஒரு தாக்குதற் திட்டமாகும்.*

*ஏனெனில் கடற்படையையும், தரைப்படையையும் கொண்ட ஒரு பெரிய தளம்தான் பூநகரி கூட்டுப்படைத்தளம்.*

*சுருக்கமாகச் சொன்னால் இது ஒரு ஈரூடகத் தாக்குதல் ஆகும். இத்தாக்குதல் தொடங்கி முடியும்வரை நீரூடாகவும் – நிலமூடாகவும், நீரிலும் – நிலத்திலும் நடவடிக்கைகள் தொடர்ந்தவண்ணமேயிருக்கும். அதேவேளை நீராகினும் சரி, நிலமாகினும் சரி வேகம் மிக முக்கியம். எமது சூழலிலுள்ள ஈரூடகப் பிராணிகளில் வேகத்தை நீரிலும் நிலத்திலும் ஏறக்குறைய சமனாகக்கொண்டது தவளைதான். அதேவேளை தவளையின் பாய்ச்சலும் – நீச்சலும், அது இரைகளைப் பிடித்துக்கொள்ளும் தன்மையும் பெரும்பாலும் குறிப்பிசகாதவைகளாக அமைந்திருக்கும்.*

*எனவேதான், ஈரூடகத் தாக்குதல் திட்டத்தைக்கொண்ட பூநகரி கூட்டுத்தளம் மீதான தாக்குதலுக்கு, ‘ஒப்பறேசன் தவளை’ என்ற பொருத்தமான பெயரைத் தலைவர் அவர்கள் சூட்டினார்.*

பூநகரி கூட்டுத்தளத்தின் பூகோள அமைவிடம் சிங்களப் படைக்குச் சாதகமாகவே உள்ளது என்பது வெளிப்படை. கடற்படையின் துணையும், வான்வழி உதவிகளை சுலபமாகப் பெறக்கூடிய நில அமைப்பும், பெரும் எடுப்பிலான கெரில்லாத் தாக்குதலுக்குச் சாத்தியமற்ற ஒரு நிலப்பரப்பையும் கொண்ட ஒரு பிரதேசமாகவே பூநகரிப் பகுதி இருந்தது. இதனால் புலிகள் ஒரு பெரும் தாக்குதலை பூநகரி கூட்டுத்தளம்மீது நடாத்தத் துணியமாட்டார்கள் என்றும், அவ்விதம் நடாத்தினாலும் சுலபமாக அதை முறியடித்துவிடலாம் என்றும் படையினர் எண்ணியிருப்பர். ஆனால் புலிகளின் தலைமை தயாரித்த சிறப்பான தாக்குதற் திட்டங்களும் – அதற்கே உரிய தந்திரோபாயங்களும், புலிவீரர்களின் அபாரமான துணிச்சலும் – போர்த்திறனும் புலிகள் இயக்கத்திற்கு ஒரு பெரிய வெற்றியைத் தேடிக் கொடுத்துவிட்டன. இப்பெரு வெற்றியானது தமிழீழ மக்கள் மத்தியிலும், சிங்கள தேசத்திலும், சர்வதேச சமூகத்திலும் பல தாக்கங்களையும் – மாற்றங்களையும் ஏற்படுத்தும் என்பது உறுதி.

குடாநாட்டைச்சூழ இடப்பட்ட முற்றுகை வலையை இணைக்கும் பிரதான முடிச்சுக்களில், பூநகரி கூட்டுத்தளம் முக்கியமானது. கடற்படை, தரைப்படை என்று ஏறக்குறைய 1500 பேரைக் கொண்டிருந்த பிரமாண்டமான தளம் அது. 17.10.91 அன்று மண்டைதீவிலிருந்து படையெடுத்துவந்தசிங்களஇராணுவம் பூநகரியில் ஒரு முகாமை நிறுவி, கேரதீவு–சங்குப்பிட்டி பாதையை தடைசெய்தது. அதன் பின்னர் 28.06.92 அன்று கொம்படி - ஊரியான் பாதையும்இராணுவநடவடிக்கை ஒன்றின்மூலம் தடைசெய்யப்பட, கிளாலி கடல்நீரேரி போக்குவரத்துப் பாதையாக மாறியது. இந்தக் கடல்நீரேரிப் பயணத்தை, தடைசெய்ய நாகதேவன்துறையை உள்ளிட்ட ஞானிமடத்தில் ஒரு கடற்படைத் தளத்தை அரசு நிறுவியது. இக் கடற்படைத் தளத்தைச்சேர்ந்த படையினர், பிரயாணிகளின் படகுகளை வழிமறித்துத் தாக்கி, சுமார் 350 பேர்வரை படுகொலை செய்திருப்பது நினைவுகூரத்தக்கது.

நவீன ‘றாடர்’ சாதனங்களுடன்கூடிய இக்கடற்படைத் தளத்தையும், ஞானிமடத்திலிருந்து கௌதாரிமுன்னவரையுள்ள நிலப்பகுதியை ஆக்கிரமித்தபடி, சுற்றிவர 25 கி. மீ.

(மறுபக்கம் பார்க்க)



புலிகளின் பாய்ச்சலுக்குப்பின்னர் பூநகரி சிங்களப்படைத்தளம்.

**கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கை ஏறக்குறைய ஆயிரமாக இருக்கலாம் என உலக செய்திநிறுவனங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.**

# தி.மு.கவில் பிளவு : ஒரு பிராமணியச்சதி

கலைஞர் கருணாநிதியின் தலைமைத்துவத்திற்கும் வை. கோபாலசாமியின் அணியினர்க்கும் இடையில் இருந்து வந்த பிணக்கும், இறுதியில் வை. கோபாலசாமி கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட நிகழ்வும் தி. மு. க.வினுள் நடந்த உட்கட்சிப் பிரச்சினை என்பதைவிட, அது திராவிட இயக்கத்தின் பலத்தைச் சிதைத்தெறியும் ஒரு சதி என்பதே உண்மையாகும்.

தமிழ்நாட்டில் தமிழ்த் தேசியம் பலமடைவதை விரும்பாத இந்தியப் பிராமணியமே இந்தச் சதியின் சூத்திரதாரிகளாகும்.

பிராமணியம் என்ற சொற்பதம் இந்திய ஆதிக்கச் சக்திகளையே குறிக்கின்றது.

தி. மு.கவின் உட்கட்சிப் பிரச்சினையைத் தனக்குச்சாதகமாக எடுத்துக்கொண்ட பிராமணியம், புலிகள் இயக்கத்தை அதற்குள் தொடர்புபடுத்தி ஒரு உணர்ச்சிபூர்வமான சதிகார விளக்கத்தைக் கொடுத்து, தி. மு. கவைப் பிளவுபடுத்தியுள்ளது.

இந்தக் கட்சிப்பிளவால் தி.மு. கவின் எதிர்காலம் என்ன? வை. கோவின் நிலை என்ன என்பதைத் தெளிவாகக் கூறமுடியாவிட்டாலும், இந்தப் பிராமணியச் சதிக்குப் பலியாகிய கலைஞரின் விவேகமற்ற செயற்பாடுகள் உலகளாவிய ரீதியில் தமிழ்த்தேசியத்தைக் காயப்படுத்திவிட்டது என்பது, வெளிப்படையான உண்மை.

இந்த வகையில், உலகத் தமிழ் இனத்திற்கு ஒருபெரும் அரசியற் துரோகத்தைக் கலைஞர் இழைத்துள்ளார் என்ற குற்றச்சாட்டிலிருந்து அவர் தப்பிப்பது கடினம்.

பிராமணியத்தின் ஏகபோக பிரதிநிதியாகிய கொங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் செயலிழந்தும் மத்தியில் வலுவிழந்தும்வரும் அதேவேளை, தமிழ்த்தேசியவாதத்தைப் பிரதிபலிக்கும் தி. மு. க. படிப்படியாகப் பலம்பெற்று வளர்ந்து வந்ததை, இந்தியப் பிராமணியத்தால் சகிக்கமுடியவில்லை.

புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியும், தி. மு. கவின் எழுச்சியும் ஒன்றுசேர்ந்து இந்தியப் பேரரசைப் புற்றுநோய்போல அரித்துவிடும் என்று, பிராமணியம் அஞ்சுகின்றது.

புலிகளை அழிக்க அல்லது பலவீனப்படுத்த, இந்தியப் பிராமணியம் தன்னாலான அனைத்தையும் செய்துகொண்டிருக்கின்றது. ஆனாலும் பெரிதாக எந்தப்பலனும் அதற்குக் கிடைக்கவில்லை.

இந்த நிலையிலேயே தி. மு. கவினுள் தோன்றி விஸ்வரூபம் எடுத்த உட்கட்சிப் பிரச்சினையைச் சதித்தனமாகக் கையாண்ட பிராமணியம், ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் தந்திரோபாயத்தைத் தீட்டியது. தி. மு. கவைப் பிளவுபடுத்தவும், புலிகள் இயக்கத்தைக் களங்கப்படுத்தவும் அந்தத் தந்திரோபாயத்தைப் பயன்படுத்தியது.

" கருணாநிதியைக் கொன்று கோபாலசாமியைத் தி மு. கவின் தலைவராக்க புலிகள் திட்டமிட்டுள்ளனர் " என்ற புரளியை - புனைகதையை - உளவு நிறுவனமான 'றோ' வின் மிக முக்கிய அறிக்கைபோல பாவனைசெய்த பிராமணியம், தனது சதிச்செயலில் கணிசமான வெற்றியையும் பெற்றுவிட்டது.

இந்தச் சதிவலைக்குள் வீழ்ந்த கலைஞர், தன் கண்ணைத் தானே குத்தியதுபோல தி மு. கவிற்குள் நிரப்ப முடியாத விரிசலை ஏற்படுத்தியுள்ளதுடன், தமிழ்நாட்டின் தமிழ்த்தேசியத்தையும் பலவீனப்படுத்தியுள்ளார். அத்துடன் தமிழீழ தேசியத்தையும் அவமானப்படுத்தியுள்ளார்.

வை. கோபாலசாமியை கட்சியிலிருந்து விலக்கிவிடுவதன் மூலம் கருணாநிதி பெறமுயன்ற நன்மைகள் இரண்டு.

1. தனது மகன் ஸ்டாலினை தனக்கு வாரிசாக உருவாக்கி விடுவது.
2. கொங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து, தமிழக ஆட்சியைப் பிடிப்பது.

ஆனால் வை. கோவின் அணியில்லாது பலவீனமடைந்த தி. மு. கவுடன் தேர்தல் கூட்டுவைத்து தானும் தோற்க, கொங்கிரஸ் கட்சி ஒன்றும் முட்டாள்களின் கட்சியல்ல. அதைவிடுத்து கூட்டுக்கு ஆயத்தமாக இருக்கும் ஜெயலலிதாவுடன் இணைந்து ஆட்சியைப் பிடிக்கவே கொங்கிரஸ் முடிவெடுக்கும்.

அப்படியாயின்,வை.கோபாலசாமி இல்லாத தி. மு. கவுடன் கூட்டுவைக்க தாம் தயார் என தமிழ்நாட்டு கொங்கிரஸ்கட்சியும் வேறுசில பிராமணிய மூளைகளும் ஆசை காட்டியதன் மர்மம் என்ன?

வேறொன்றிற்குமல்ல, தி. மு. கவை இரண்டு துண்டுகளாக உடைத்து, மீண்டும் புத்துயிர் பெறமுனையும் தமிழ்நாட்டின் தமிழ்த்தேசியத்தை நசுக்கிவிடவே, பிராமணியம் சூழ்ச்சி செய்தது.

இந்தப் பிராமணியச் சூழ்ச்சி தமிழீழ தேசியத்தைப் பாதித்துள்ளதா?

தமிழீழ தேசியம் எவர் மீதும் தங்கியிராததால், பிராமணியத்தின் சதிச்செயலோ அல்லது கருணாநிதியின் துரோக அரசியலோ, ஈழத்தமிழர்களைப் பெரிதாகப் பாதிக்கப்போவதில்லை. ஆனாலும் தமிழ்நாட்டின் தேசியபலத்தைப் பிராமணியச் சதிக்கு இரையாக்கிச் சிதைத்தார் என்ற வரலாற்று அவப்பெயரை, கருணாநிதி சம்பாதித்துவிட்டார்.

## பூநகரி....

நீளமான இராணுவ வேலியையும் கொண்டதாக, இந்தக் கூட்டுத்தளம் அமைந்திருந்தது.

ஞானிமடத்திலிருந்த பெரிய கடற்படை முகாமுடன், மேலும் ஆறு இராணுவ முகாம்களையும் அவற்றுடன் கூடிய பல மினிமுகாம்களையும் – நூற்றுக்கணக்கான காவல் அரண்களையும், இவை எல்லாவற்றையும் இணைத்த ஒரு நீண்ட இராணுவ வேலியையும் கொண்ட ஒரு பலமான தளமாக, பூநகரி கூட்டுத்தளம் விளங்கிவந்தது.

இந்தக் கூட்டுத்தளம் மாவீரர் நாளுக்கு முன்னர் புலிகளால் தாக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பை, சிங்களப் படைத்துறை ஏற்கெனவே வெளியிட்டிருந்தது. ஆனாலும் ஒரு பூகம்பத்தைப்போல இவ்வளவு பிரமாண்டமானதாக அந்தத் தாக்குதல் அமையும் என்பதை, சிங்களப்படையினர் எண்ணியிருக்கமாட்டார்கள்.

1990 ஆம் ஆண்டு தீபாவளி தினத்தன்று, சிங்கள இராணுவம் வசாவிளான் பகுதியை நோக்கிப் படையெடுத்து வந்தது.

"தீபாவளியை படையினர் வெடிகொளுத்திக் கொண்டாடினர்" என்று அந்த இராணுவ நடவடிக்கையை, ரஞ்சன் விஜேரத்னா சிலேடையாக விபரித்தார்.

ஆனால் 1993 ஆம் ஆண்டு, டாங்கிகளையும் நீருந்து விசைப்படகுகளையும் பிடித்து விளையாடி, கைப்பற்றப்பட்ட வெடிப் பொருட்களுக்குள் ஒளித்து விளையாடி புலிகள் தீபாவளியைக் கொண்டாடினார்கள் என்ற செய்தியை அறிய, ரஞ்சன் விஜேரத்னா இன்று உயிரோடில்லை!

பூநகரி கூட்டுத்தளத்தில் சிங்களப்படை சந்தித்த பேரிழப்பு, சிங்கள மக்களை அதிர்ச்சிக்கும் அச்சத்திற்கும் உள்ளாக்கியுள்ளது. அதே வேளை சிறீலங்கா அரசுமீதும் படைத்துறைத் தலைமைமீதும் சிங்கள மக்கள் கோபமடைந்துள்ளனர்.

"வருகின்ற ஜனவரிக்குள்/ மார்ச்சுக்குள் எல்லாம் முடிந்துவிடும்; புலிகள் அழிக்கப்பட்டுவிடுவர்" என்ற எதிர்பார்ப்புடன் இருக்கவைக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு, பூநகரி படைமுகாமின் கதி பேரிடியாக விழுந்துள்ளது.

சிங்களப்படையின் வரலாற்றில் இத்தகைய ஒரு பேரழிவை அது சந்தித்ததேயில்லை! அத்துடன் உலக இராணுவக் குறிப்பேடுகளில் ஒரு ஆவணமாகப் பொறிக்கப்படும் அளவுக்கு, ஒரு 'கின்னஸ்'சாதனையாகவும் இப்பெருந்தாக்குதல் மாறிவிட்டது.

தாயக விடுதலைக்காகப் போராடும் ஒரு கெரில்லா இயக்கம்,ஒரு அரச இராணுவ நிலை மீது கெரில்லாமுறைமூலம் பெரும் தாக்குதலை நடாத்தி, இவ்வளவு தொகையில் அரச படைகளைக் கொன்று, அவர்களின் ஆயுதங்களையும் கைப்பற்றியதாக வரலாறே இல்லை. அந்த உலக சாதனையை புலிகள் இயக்கம் படைத்துள்ளது. இப்பெரும் சாதனை மூலம், விடுதலைப் போராட்டம் வெல்லப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையை தமிழீழ மக்களும் பெற்றுள்ளனர்.

## தாய்....

*மீண்டும் .....*
*"கொண்டு வாங்கையா, எங்கட கையாலயே அவன வெட்டுறம்;கொல்லுறம்."*

*அந்த முகாம் பொறுபபதிகாரி முகத்தில் புன்னகை. அது மிகவும் குரூரமாகவிருந்தது. ஏனையோரிடம் கண்ணைக் காட்டினான் அவன். அவர்கள் வில்லியத்தைத் தூக்கி வந்தனர். கூடவே ஒரு கத்தியும் கொண்டுவரப்பட்டது.*

*"உம் வெட்டுங்க ..... வில்லியத்தை வெட்டுற தெண்டு சொன்னீங்களே .... ? வெட்டுங்க."*

*சிலையாகி நின்றனர் அனைவரும். இப்படியொரு நிலையை எவருமே எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்ததை விட காட்டுமிராண்டியாக இருக்கிறானே இவன் என்று, ஆச்சரியத்துடன் விழிபிதுங்க நின்றனர். இரத்தோட்டமே நின்றுவிடும் போல் இருந்தது.*

*"உம் வெட்டுங்க......"*

*அவர்களை நெருங்கினான் அவன்...... மூளையும் மனதும் ஒப்பாமலே ஒருவர் கத்தியை ஏந்தினார். ஏனையோரையும் வெட்டச் சொன்னான் அந்தப் படையதிகாரி.*

*வெட்டுவதா..... எதிரே கிடப்பவன் மனிதன்... உயிரோடிருக்கிறான்...... துடிக்கிறான்..... அதுவும் அவர்களால் நேசிக்கப்பட்டவன்.*

*தமிழ்ச்சாதியின் விதியை நொந்தவாறே கத்தியை ஓங்கினார் அவர் ... 'இவனை வெட்டுவதா... ?' கத்தி மெதுவாகத்தான் தொட்டது வில்லியத்தின் உடலை. அந்தப் பெரிய கூர்க்கத்தியினால ஏற்படுத்திய காயம்,சவர அலகால் ஏற்படுவதை விடச் சிறியதாக இருந்தது.*

*வில்லியம் துடித்துக்கொண்டிருக்கிறான். கீழேயிருந்து, வெட்டுபவரிடம் கூறுகின்றான்-*

*" மெல்ல வெட்டாதீங்க...... ஒரேயடியா வெட்டுங்க."*

*இதற்கு மேலும் அவரால் இயங்க முடியவில்லை. படையதிகாரி அதட்டினான். மீண்டும கத்தியை எடுத்தார்.*

*" மெல்ல வெட்டாதீங்க... ஒரேயடியா வெட்டுங்க......"*

*அவரால் இயல்பாக இயங்க முடியவில்லை. இதைப் பார்த்ததும் படையதிகாரிக்குக் கோபம்வந்தது.*


*"இப்படியா வெட்டுறது..... ? இந்தா பார் எப்பிடி வெட்டுறதெண்டு"*

*அசுர வேகத்தில் இயங்கினான் அவன். எல்லோர் கண்ணெதிரிலும் வில்லியம் துடித்துத் ... துடித்து ...*

*அன்றைக்கும் இலங்கை வானொலி "பயங்கரவாதியொருவர்" கொல்லப்பட்டதாகத்தான் தெரிவித்தது.*

*அன்று மாலையும் ரூபவாஹினி, புத்தர் சிலைக்கு முன்னால் வணக்கம் செலுத்தப்படும் காட்சியை ஒளிபரப்பியது!!*

# எனது மக்களின் விடுதலைக்காக..



''நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுத வலிமையைப் பிரயோகிக்கும் இந்த அமைப்பினை, ஆயுதப் போராட்டத்தின்மூலமே எதிர்கொள்ள முடியும் என்று, நான் ஆழமாக உணர்ந்தேன்.''

கட்டுப்பாட்டிற்கும், உறுதிக்கும் போர்த்திறனிற்கும், அர்ப்பணிப்பு உணர்வுக்கும் உலகமே போற்றும் உன்னத விடுதலை இயக்கத்தின் தலைவன் என்ற வகையிலும் •

இனவெறிபிடித்த - கொடூரமான ஒரு அரச படையை எதிர்த்து, விடுதலைப் போரைத் திறமையுடன் வழிநடாத்தும் ஒரு தளபதி என்ற வகையிலும். தலைவர் பிரபாகரனது கருத்துக்களும் சிந்தனைகளும் உலக சமுதாயத்தால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் ஒரு விடயம் என்பது இயல்பே!

எனது மக்களின் விடுதலைக்காக என்ற தலைப்பிலான தலைவர் பிரபாகரனது கருத்துத் தொகுப்பு. இந்த ஆவலைப் பூர்த்தி செய்யும் எனலாம்.

உலகம் வியக்கும் இந்த விடுதலை அமைப்பை அவர் எப்படி ஆரம்பித்தார்?

இந்த ஆயுதப் போராட்ட அமைப்பை உருவாக்க வேண்டும் என்று அவரைத் தூண்டிய காரணிகள் எவை?

இந்த விடுதலைப் போராட்டம் தொடர்பான அவரது மதிப்பீடுகளும் கருத்துக்களுமென்ன? என்பன போன்ற ஆர்வத்தைத் தூண்டும் வினாக்களுக்கு. இத் தொகுப்பு நூல் விடையளிக்கின்றது.

அதேவேளை, சிங்களப் பேரினவாத அரசுகளானது மாறிமாறி எழுந்தபுறச்சூழல்களை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தந்திரோபாயமாகவோ அல்லது ஆயுத பலத்தைப் பயன்படுத்தியோ நசுக்க முயன்றபோதெல்லாம், தமிழினத்திற்குச் சார்பான வகையில் தீர்க்கதரிசனமான முடிவுகளை எடுத்த தலைவர், விடுதலைப் போராட்டத்தை எங்ஙனம் கட்டிவளர்த்து அதை முன்னோக்கிச் செலுத்திக்கொண்டிருக்கின்றார் என்ற வரலாற்றையும் இந்நூலை முழுமையாகப் படிக்கும் ஒருவர் தெரிந்துகொள்வார்.

அத்துடன் சிங்களப் பேரினவாதம் என்றைக்குமே தமிழர்களுக்கு நீதிவழங்கப் போவதில்லை; தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரேதீர்வு தமிழீழத் தனியரசுதான் என்ற யதார்த்த உண்மையை, தலைவர் அன்றிலிருந்து இன்றுவரை தீர்க்கதரிசனத்துடன் வலியுறுத்திச் சொல்லிவருவதை. இத் தொகுப்பு நூலில் காணலாம்.

இந்திய அரசின் நேரடித் தலையீடு நடைபெற்ற 1987ஆம் ஆண்டுப் பிற்பகுதியில் ஒருநாள் .....

புலிகள் இயக்கத்தை தனது இராஜதந்திரப் பொறிக்குள் சிக்கச் செய்யும் நோக்குடன், இந்திய இராஜதந்திரி டிக்சிற் அவர்கள் தலைவரை அழைத்து. பலாலியில் ஒரு பேச்சுவார்த்தையை நடாத்திக்கொண்டிருந்தார்.

அவர் விரித்துவைத்துவிட்டுக் காத்திருந்த பொறிக்குள் சிக்காது தவிர்த்தும் - தாண்டியும் தலைவர் பிரபாகரன் நகர்த்திய இராஜதந்திரக் காய்நகர்த்தலைக் கண்டு பொறுமையிழந்த திரு டிக்சிற், தலைவரை நோக்கி .....

''எம்மை நீங்கள் மூன்று தடவைகள் ஏமாற்றிவிட்டீர்கள்'' என்று, தனது இராஜதந்திர இயலாமையைக் கோபமாக வெளிப்படுத்தினார்.

அதற்குத் தலைவர் பதிலளித்தார்.

''அப்படியானால் நான் நினைக்கிறேன், எனது மக்களை மூன்று தடவைகள் நான் பாதுகாத்துவிட்டேன்'' என்று அவருக்கே உரிய அமைதியுடன் தலைவர் கூறிமுடித்தார்.

இந்தச் சம்பவம் நடந்து சில வாரங்களின்பின் இந்தியப்படைகள் போரைத் தொடக்கிவிட்டன. பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டும். துன்புறுத்தப்பட்டும் வந்தனர். போரை உடனடியாக நிறுத்திப் பொதுமக்களது அழிவைத் தடுக்கும்படி. இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு அடுத்தடுத்து தலைவர் அன்பான வேண்டுகோள் விடுத்தார். ஆனால், அதிகார மமதையுடன் அதை நிராகரித்த ராஜீவ், ''பிரபாகரனை எனது காலடியில் விழவைக்கிறேன்'' என்று சூளுரைத்திருந்தார் போர் தீவிரமடைந்தது. பேரழிவிற்கு உட்பட்டாலும மக்களின் ஒத்துழைப்புடன் புலிவீரர்கள் போர்க்களத்தில் காவியம் படைக்கத் தொடங்கினர். நாட்கள் செல்லச் செல்ல 'ஆப்பிழுத்த குரங்கின் கதைபோல' இந்தியப்படைகள் நிரந்தரமாகவே இக்கட்டுக்குள் மாட்டிக்கொண்டன. இப்போது சமரசம் பேச புலிகளுக்கு மறைமுக அழைப்புகளை இந்திய அரசு விடுத்தது. இந்தியாவின் உள்நோக்கத்தை சமரசம் மூலம் ஆக்கிரமிப்பைத்தொடரும்எண்ணத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்ட தலைவர் சமரச அழைப்பைப் புறந்தள்ளிவிட்டு, இந்தியப்படைகளுக்கெதிராக இராஜதந்திர ரீதியாகவும் - இராணுவ ரீதியாகவும் தீவிர நடவடிக்கைகளை எடுத்தார். இறுதியில் இந்தியப் படைகளை தமிழீழத்தை விட்டோடச் செய்தார்.

போரோ - சமரசமோ அது எதுவாக இருந்தாலும், தமிழீழமக்களின் நிரந்தர நலனுக்காகத் தீர்க்க தரிசனத்துடன் தலைவர் அயராது பாடுபட்டதை, இத்தொகுப்பு நூல் சொல்கிறது.

இதைப்போன்று தமிழீழத் தேசியத்தைக் குறிவைத்து வீசப்பட்ட இராஜதந்திரச் சதிகளையும் - ஆக்கிரமிப்புப் புயல்களையும் எதிர்கொண்ட தலைவர் அவர்கள், அவற்றை சாதுரியமாகவும். அதேவேளை உறுதியுடனும் எப்படிக் கையாண்டு அவற்றை வெற்றிகொண்டு வருகிறார் என்பதையும், இக் கருத்துக் தொகுப்பு நூலை வாசிக்கும் ஒருவர் தெரிந்துகொள்ள முடியும்.

ஆயுதப் போராட்டமே ஒரேவழியென்ற முடிவுக்கு நீங்கள் வரக் காரணமாக இருந்த உங்களது தனிப்பட்ட அனுபவங்களைக் கூற முடியுமா என்று 'சண்டே' இதழின் செவ்வியாளர் கேட்டபோது

"நான் பள்ளிச்சிறுவனாக இருந்த போது, 1958 ஆம் ஆண்டின் இனக் கலவரங்களில் நிகழ்ந்த பயங்கரச் சம்பவங்கள் என் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தின. எங்கள் குடும்பத்திற்குத் தெரிந்த ஒரு விதவைத் தாயை நான் ஒருமுறை சந்தித்தபோது, அவர் இந்த இனவெறியாட்டத்தில் தனக்கு நேர்ந்த துயரமான அனுபவத்தை என்னிடம் சொன்னார். சிங்களக் காடையர்கள் கொழும்பிலிருந்த அவரது வீட்டுக்குத் தீவைத்து, அவருடைய கணவரையும் குரூரமாகக் கொலைசெய்தனர். அவரும் அவரது பிள்ளைகளும் பலத்த எரிகாயங்களுடன் உயிர்தப்பினர். அவரது உடலில் காணப்பட்ட எரிகாயத் தழும்புகளைப் பார்த்தபோது நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். சிறு குழந்தைகளை கொதிக்கும் தாருக்குள் உயிருடன் வீசிக்கொன்ற கோரச்சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். அநாதரவான அப்பாவித் தமிழர்கள் எவ்வாறெல்லாம் கொடூரமான தாக்குதலுக்கு இலக்காகினர் என்பதையெல்லாம் கேட்கும்போது, என் மக்கள்மீது ஆழ்ந்த அனுதாபமும் - அன்பும் ஏற்பட்டன. இந்த இனவெறியமைப்பின் பிடிக்குள்ளிருந்து எம்மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்ற பெரும் உந்துதல் என்னிடம் தோன்றியது. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுத வலிமையைப் பிரயோகிக்கும் இந்த அமைப்பினை, ஆயுதப் போராட்டத்தின்மூலமே எதிர்கொள்ள முடியும் என்று, நான் ஆழமாக உணர்ந்தேன், என்று, தலைவர் அவர்கள் தனது அனுபவத்தை மீட்டுச் சொன்னார்.

இதேபோல, தமிழீழத்தில் தான் சந்தித்த இராணுவத் தோல்விகளை மறைக்க முயன்ற இந்திய அரசு, ''ஒரு கையை பின்னால் கட்டிக்கொண்டு தமிழீழத்தில் போரிட்டதாக'' கூறியது. இது தொடர்பாக ஒரு பத்திரிகையாளர் தலைவரிடம் கேட்டபோது.

''ஒரு கையை பின்னால் கட்டியபடி இந்திய இராணுவம் எமது மக்கள்மீது இத்தகைய கொடுமைகளைச் செய்தார்கள் என்றால், இரு கைகளாலும் எத்தகைய அட்டூழியங்களைப் புரிந்திருப்பார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவே நெஞ்சு நடுங்குகின்றது'' என்று இந்தியப் படையின் இயலாமையையும் - அவர்கள் செய்த படுகொலைகளையும் தாருக்காகச் சொல்லியிருந்தார்.

இவ்வாறு பல சுவாரசியமான விடயங்கள் இத்தொகுப்பு நூலில் உள்ளன.

ஒட்டுமொத்தமாக இத்தொகுப்பு நூலை மதிப்பீடுசெய்வதாயின், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பத்தாண்டுகால போராட்ட வரலாறு இத் தொகுப்பு நூலில் பொதிந்து கிடக்கின்றது என்று கூறலாம்.

மொத்தம் அறுபத்தாறு தலையங்கங்களின் கீழ் அந்தந்தக் காலகட்டத்தை நினைவுகூரும் தலைவரின் நிழற் படங்களுடன், இத் தொகுப்பு நூல் அழகாக வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பத்து ஆண்டு காலகட்டத்தில் ஏற்பட்ட வரலாற்று நிகழ்வுகள். திருப்புமுனைகள். அரசியல் நெருக்கடிகள், போர் நடவடிக்கைகள். அரச பயங்கரவாதக் கொடுமைகள் என்பவற்றிற்கு அவ்வப்போது தலைவர் அளித்த விளக்கங்களும் மதிப்பாய்வுகளும் இத் தொகுப்பில் உள்ளடங்கி இருக்கின்றன.

## தலைவர் பிரபாகரனின் கருத்துத் தொகுப்பு

நீண்டதும் வீரம் செறிந்ததுமான போராட்ட வரலாற்றில், தனது சொந்த அனுபவங்களையும் வாழ்க்கைப் பின்னணியையும் தான் வரித்துக்கொண்ட இலட்சியங்களையும், தனது உலகப் பார்வையையும் மிகவும் தெளிவாகவும், துல்லியமாகவும் உலகப் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டிகளில் தலைவர் விளக்கியிருக்கின்றார். அரசியல் நிலைவரங்கள், போராட்டச் சூழ்நிலைகள் மட்டுமல்லாது கல்வி, பொருளாதாரம், கலை இலக்கியம், பெண் விடுதலை, நீதிநிருவாகம் போன்ற பல்வேறு விடயங்களுக்கும் தலைவர் வழங்கியுள்ள கொள்கை விளக்கங்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

தலைவர் பிரபாகரனின் அரசியல் சிந்தனையையும் சமூகப் பார்வையையும் ஆழமாக அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு, இந்த நூல் ஒரு அரிய விருந்தாக அமையும்.

சுருக்கமாகச் சொன்னால், 'எனது மக்களின் விடுதலைக்காக' என்ற இந்த நூல், தமிழர்கள் அனைரவது வீடுகளிலும் படிக்கப்படவேண்டிய, ஒரு உயிர்த்துடிப்புள்ள வரலாற்று நூல் ஆகும். ○

# விதைக்கப்பட்டது வீரமும்தான்



## மேஜர் ரவிசங்கர்

(யூ. வின்சன் கெனடி)
சாவற்காடு, மன்னார்.
08-09-1970
09-06-1992

சிறுநாவற்குளம் படை முகாமிலிருந்து 300யார் தூரத்திலுள்ள பிரதான வீதிச் சந்தி.

எப்போதும் இராணுவத்தினரின் அணி ஒன்று அங்கு காவலுக்காகப் பதுங்கி இருப்பது வழமை.

முன்னிலையில் ஒரு ஏ. கே. எல். எம். ஜியைக் கொண்டதாக, எந்த நேரமும் இரை தேடியபடி அந்த அணி காத்திருக்கும்.

இந்த இராணுவ அணியை வளைத்துத் தாக்கி அழித்துவிடுவதற்கு முடிவுசெய்யப்பட்டது. வேவு பார்த்து - திட்டமும் தயாரிக்கப்பட்டது. ரவிசங்கர் இந்த முயற்சியில் ஓய்வின்றிச் செயற்பட்டுக்கொண்டிருந்தான்.

எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகி முடிந்திருந்தபோது - 28. 07. 1992 அன்று, எதிர்பாராதவிதமாக ஒரு துயரம் சம்பவித்துவிட்டது.

மேஜர் பாரதி உட்பட எங்களது 4 பெண் போராளிகள் இதே பாதையால் தவறுதலாகப் பிரவேசித்ததில், அதே இராணுவ அணியின் தாக்குதலுக்கு இலககாகி வீரச்சாவடைந்துவிட்ட சோகம் நிகழ்ந்தது.


ரவிசங்கர் துடித்துப்போனான். 'எல்லாம் தயார்' என்றாகியிருந்தசமயத்தில் இப்படியாகிவிட்டதே என்று வேதனைப்பட்டான்.

''அந்த ஏ. கே. எல். எம். ஜி காரன்தான் எங்கட பெண்போராளிகளைப் போட்டிருப்பான்...... முன்னுக்கிருக்கிற அவன்ர 'ரேஞ்சு'க்குள்ளதான் அவையள் சிக்கியிருக்கினம்......'' என்று தோழர்களிடம் பொருமினான்.

''நான் செத்தாலும் பரவாயில்லை...... இந்தச் சண்டையில அந்த ஏ. கே. எல். எம். ஜி காரனை சாகடித்து, அந்த ஏ. கே. எல். எம். ஜியை எடுத்தே தீருவன்......'' என்று, தன் இலக்கில் இன்னும் உறுதியாகினான்.

இது நடந்து ஒன்பதாவது இரவு அந்த இராணுவ அணி தாக்கப்பட்டது. புலிகளின் ஆவேசமான பாய்ச்சல். அனல் விழிகளோடு சண்டையில் முன்னேறிய ரவிசங்கர் அந்த இராணுவத்தினனை வீழ்த்தி அந்த எல். எம். ஜியை எடுத்துச் சக போராளிகளிடம் கொடுத்தான். தன் நோக்கத்தை அடைந்த திருப்தி அவனது முகத்தில் பளிச்சிட்டது. ஆனால் அடுத்த நொடி...... எதிரியின் ரவைகளில் சில அவனைத் துளைத்துச்சென்றன.

சண்டை முடிந்த பின்னர் - வேறு ஆயுதங்களுடன் இந்த ஏ. கே. எல் எம். ஜியையும் ரவிசங்கரின் உடலையும், நெஞ்சத்தில் அவனது நினைவையும் சுமந்துகொண்டு நாங்கள் வந்தோம்.



## லெப். சாம்

(துரைரட்ணம்ஜெயரூபன்)
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
27-04-1964
06-10-1985

அது ஒரு முற்பகல்வேளை.

முகாமில் சாம் தனது கைத்துப்பாக்கியைத் துப்புரவுசெய்துகொண்டிருந்தான்.

அருகில் சில தோழர்கள் ஏதேதோ வேலைகளில் மூழ்கிப்போயிருந்தார்கள்.

என்ன நினைத்தானோ தெரியவில்லை, திடீரென்று சாம் சொன்னான்: "தம்பிமார், எங்கட எந்த ஒரு பொருளும் ஆமியிட்டை சிக்கக்கூடாது; போக விடக்கூடாது.''

அருகிலிருந்த நண்பன் சிரித்துக்கொண்டே கேட்டான், ''நீங்க ஆமியிட்ட அகப்படுற சந்தர்ப்பம் வந்திட்டா, இந்த றீட்டாவை என்ன செய்வீங்க அண்ணை......?''

குனிந்திருந்து துடைத்துக்கொண்டிருந்தவன் நிறுத்திவிட்டு, தலையை நிமிர்த்திப் பார்த்துச் சொன்னான்-

''ஆமி இதை முழுதாக எடுக்கேலாது. அப்படி ஒரு நிலை வந்தால், றீட்டாவை அடித்து உடைத்துவிட்டுத்தான் நான் சாவன் தம்பி...''

அன்றைய நாளின் பிற்பகல் வேளை.

ஏதோ அலுவலாக, மோட்டார் சைக்கிளையும் எடுத்துக்கொண்டு சாம் புறப்பட்டான்.

எதிர்பாராதவிதமாக, நாயாற்றுவெளியில் பதுங்கியிருந்த இராணுவத்தினரிடம் சாம் சிக்க நேர்ந்தது. அவர்கள் வளைத்துத் தாக்க, மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு சாம் தப்பி ஓட முயன்றான்.

நூற்றுக்கணக்கில் சுற்றிவளைத்துத் துரத்தும் படையினரை நோக்கித் தனது கைத்துப்பாக்கியால் சுட்டபடி சாம் வெளியேற முயன்றான்.

இயலுமானவரை விரைந்து ஓடினான். எவ்வளவு தூரம்தான் ஓடமுடியும்......? கைத்துப்பாக்கியின் கடைசி ரவையும் சுடப்பட்டுவிட்டது.

இராணுவத்தினர் அவனைச் சூழ்ந்துகொண்டுவிட்டனர். அதன்பின் நடந்தது யாருக்கும் தெரியாது.

ஆனால், காலையில் தான் சொன்னதையே மாலையில் அவன் அப்படியே செய்திருந்ததை, மறுநாள் 'இரவு' ரூபவாஹினி' ஒளிபரப்பியபோது அறிந்தோம்.

குப்பி கடித்த வாயோடு சாம் விழுந்துகிடந்ததையும், கல்லில் அடித்து உடைக்கப்பட்ட 'றீட்டா' அருகில் நொருங்கிக் கிடந்ததையும் கண்டோம்.



## லெப். கேணல் சூட்டி

(சி. செல்வேந்திரன்)
சாவகச்சேரி
26-05-1967
14-07-1991

ஆனையிறவுப் பெருஞ்சமரின் ஆரம்பம்.

வெற்றிலைக்கேணிக் கரையோரம் உதவிக்குத் தரையிறக்கப்படும் சிங்களப்படையை எதிர்கொள்ளவென நிறுத்தப்பட்டிருந்த புலிகளின் சேனைக்குத் தளபதியாக, சூட்டி நியமிக்கப்பட்டிருந்தான்.

சூட்டி ஓய்வில்லாமல் இயங்கிக்கொண்டிருந்தான். இரவு பகலாக எங்கள் அரண்களைச் சுற்றி சூட்டி நடந்துகொண்டிருப்பான்.

''எனது சடலத்தின் மீதுதான் எதிரி முன்னேறுவான்'' என்று சொன்னான்.

14. 07. 1991 காலை.

அதிகமான நம்பிக்கையோடு அலட்சியமாக நின்ற ஒரு குழுத்தலைவனைக் கூப்பிட்டு சூட்டி சொன்னான்-

''சண்டையின் முடிவில் நாங்கள் சோகத்தோடு செல்லலாம்; ஆனால் அவமானத்தோடு திரும்பக்கூடாது.''

அன்று மாலை தரையிறங்குவதற்கு எதிரி இரண்டு தடவைகள் எத்தனித்தான்.

முதற்தடவை விரட்டியடிக்கப்பட்டவன், இரண்டாவது தடவை குண்டுமழை பொழிந்து வந்து கரையேறினான்.

தனது அரணில் அசையாது நின்று போராடிய சூட்டியின் சடலத்தைக் கடந்துதான், எதிரி முன்னேறினான்.

இப்போது ஆனையிறவுச் சமர் முடிந்துவிட்டது.

சூட்டி அண்ணன் சொன்னதுபோல, நாங்கள் சோகத்தோடு மட்டுமே திரும்பிவந்தோம்; அவமானத்தோடு அல்ல.



## கப்டன் மோகன் மேத்திரி

(கா. நகுலேஸ்வரன்)
வல்வெட்டித்துறை
30-09-1965
02-09-1990

கடலைப்போல எங்களது மனங்களும் கொந்தளித்துக்கொண்டிருந்தன.

தூரத்தில் புள்ளியாகத் தெரிந்த 'டோரா' வரவரப் பெருத்துக்கொண்டிருந்தது; அலைகள் கிழிய நேவிப் படகு நெருங்கிக்கொண்டிருந்தது.

எங்களின் அந்தப்படகுகள் இரண்டும் தமிழகத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தன.

அவற்றில் புலிவீரர்களுடன், முக்கிய தளபாடங்களும் கலந்து இருந்தன.

நேவிப்படகின் வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓடித்தப்பிவிடலாம் என்பது, அன்றைய நாளில் அரிதான ஒரு நிகழ்ச்சிதான்.

உடனடியாக ஏதாவது செய்தாகவேண்டும். இல்லையேல் இரண்டு படகுகளுமே அழிக்கப்படுவது உறுதி.

பொருட்களை இழந்தாலும் பரவாயில்லை. போராளிகளையாவது காக்கவேண்டும்.

மோகன் மேத்திரியின் மூளை துரிதமாக வேலைசெய்தது.

எங்கள் எல்லோரையும் அடுத்த படகிற்கு மாற்றிவிட்டு, பொருட்களைத் தான் இருந்த படகில் ஏற்றிக்கொண்டான்.

''உங்கட வண்டியை வேகமாக கரைக்கு விடுங்க. நான் இன்னொரு பக்கமாக கரைக்கு ஓடுறன். அவன் என்னைக் கலைப்பான். தப்பினா...... வந்திடுவன், அவன் நெருங்கிட்டானென்டா வண்டியையும் சாமான்களையும் எரிச்சிடுறன் .....''

தான் இறந்தாலும்கூட படகோ, பொருட்களோ எதிரியிடம் அகப்படக்கூடாது என்பதில் அவன் உறுதியாய் இருந்தான்.

கனத்த இதயங்களோடு நாங்கள் பிரிய - இரு வண்டிகளும் இரு திசைகளில் விரைந்தன.

மோகன் மேத்திரியின் படகை நேவிப் படகு துரத்திக்கொள்ள, எங்களது படகு கரையைத் தொட்டுவிட்டது.

அவன் கரையை நோக்கி ஓட, அதைவிட வேகமாக 'டோரா' அவனை நெருங்கியதை நாம் பார்த்துக்கொண்டிருந்தோம்.

ஒரு கட்டத்தில் - இனி அவன் தப்பமுடியாது என்பதை நாங்கள் துயரத்தோடு உணர்ந்துகொண்டபோது, நடுக்கடலில் ஓடிக்கொண்டிருந்த படகில் தீப்பிடித்தது.

எரிந்துகொண்டிருந்த படகிலிருந்து கையை உயர்த்தி அவன் அசைத்திருப்பான் போலும்......

எங்களது மனங்கள் துடிக்க, எங்களது கண்ணெதிரிலேயே கடலில் எரிந்துகொண்டிருந்தான்!



## சுஜாத்

(ந. குமரகுருநாதன்)
பருத்தித்துறை.
23-09-1971
16-06-1990

நள்ளிரவு.

மாங்குளம் இராணுவ முகாம் மீதான முதலாவது தாக்குதல்.

எதிரி தனது அரண்களில் இருந்து பொழிந்துகொண்டிருந்த ரவைமழைக்கு நடுவில், புலிகள் முன்னேறினர்.

புலிகளின் அணி காவலரணுக்கு நெருக்கமாக மிக அருகில் வந்துவிட்டபோது, எதிரி கைக்குண்டுகளை வீசத்துவங்கினான்.

அக்கம் பக்கங்களில் விழுந்து குண்டுகள் வெடித்தன.

திடீரென 7,8 போராளிகள் இருந்த ஒரு இடத்தில், எதிரியின் குண்டு ஒன்று அவர்களுக்கு நடுவில் விழுந்தது.

திகைத்துப்போன கணம். அடுத்த விநாடிகளில் அது வெடித்து அத்தனைபேரையும் பலி எடுக்கும்.

சுஜாத் பாய்ந்தான். ''விலத்துங்கோடா ..!'' என்று உரத்துக் கத்திக்கொண்டு - முன்னால் நின்ற தோழர்களை இரு கைகளாலும் தள்ளி விழுத்திவிட்டு, குண்டின் மீது சுஜாத் பாய்ந்தான்.

அடுத்த நொடி...... தோழர்களைக் கொல்ல இருந்த குண்டின் சிதறல்களைத் தான் ஏற்ற அந்த நண்பன், அந்தத் தோழர்களின் முன்னாலேயே சிதறிப்போனான்.

தொடர்ந்தும் புலிகளின் அந்த அணி எதிரியைப் பிடிக்கும்வரை முன்னேறியது; சிதறிய தங்கள் தோழனின் இரத்தக் கறைகளுடன்.

# விதைக்கப்பட்டது வீரமும்தான்



## ரமேஸ்

(ப. மணிவண்ணன்)
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.
01-10-1970
10-03-1989

வட்டக்கச்சிக் கிராமம் மெல்ல விடியத்துவங்கியது.

இந்தியப்படை முகாமிற்கு அருகில் மிதிவெடி நாட்டும் தனது பணியைச் செவ்வனே முடித்திருந்தான் புலிவீரன் ரமேஸ். கூடவந்தவன் ஈசன். அதே ஊரைச் சேர்ந்த புலிகளின் ஓர் ஆதரவாளன்.

அருகிலேதான் அப்போராளி ரமேசின் வீடு. தன் அம்மாவைப் பார்க்கவேண்டும்போல ரமேசுக்கு இருந்தது. இருவரும் போனார்கள். வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் கூடவந்த ஈசனை நிறுத்தி, ''கவனம் அண்ணை'' என்றுவிட்டு ரமேஸ் வீட்டுக்குள் நுழைந்தான். கையில் இருந்த பையில் மிதிவெடிகளும், 'கிறனேட்'டுகளும் இருந்தன.

தாயினதும் தனயனதும் பரவசமான சந்திப்பு. உச்சி முகர்ந்தாள்; அள்ளி அணைத்தாள். மகனைக் கண்ட அளப்பரிய சந்தோசம் அம்மாவுக்கு!

அவர்கள் அளவளாவிக்கொண்டிருக்க நிமிடங்கள் கரைந்தன. கனத்த சப்பாத்துகளின் கீழ் சருகுகள் நெரிபடும் ஓசைகேட்க, தாயின் மடியில் தலைசாய்த்துப் படுத்திருந்தவன் திடுக்கிட்டு எழுந்தான். காதுகளைக் கூர்மையாக்கினான்.

'செத்தை' நீக்கலுக்கூடாக வெளியே பார்த்தான். குழை செருகப்பட்ட தலைகள்; நீட்டிய துப்பாக்கிகள்.

வாசற் படலையை உதைத்தபடி இடிபோலக்கத்திக் கொண்டு, துப்பாக்கியோடு வீட்டுக்குள் நுழைந்தான் ஓர் இந்தியன்.

அம்மா அசைவற்றுப்போனாள். திக்பிரமை அடைந்தவளாக அவள் வாசலையே பார்த்து நிற்க, முதுகுப்புறமாக அம்மாவோடு சாய்ந்துகொண்டான் ரமேஸ். வாசலைப் பார்த்தவன் அதிர்ச்சியடைந்தான்' இவனோடு வந்த ஈசன் இப்போது அவர்களோடு வந்தான். பச்சைத் துரோகம்.

தப்பி ஓடுவதென்பது முற்றாகச் சாத்தியமற்றது என்பது அவனுக்குப் புரிந்தது.

அம்மாவோடு இறுகச் சாய்ந்துகொண்டான்.


கண்ணாடி நொருங்கும் சத்தம் சடுதியாகக் கேட்க அம்மா திடீரெனத் திரும்பினாள்.

குப்பி இல்லாத வெறும் கயிறு, வாயிலிருந்து வழுகிவிழ, அவன் அம்மாவின் காலடியில் சரிந்துகொண்டிருந்தான்.

அம்மாவுக்கு உயிர் அசையவில்லை. தான் பெற்ற பிள்ளை தனது கண்முன்னாலேயே, தனது காலடியிலேயே......

''ஐயோ......!..... ரா...சா......''

அந்தத் தாயின் ஓலத்தை மிதித்துக்கொண்டு, ரமேசது உடலைக் 'கொறகொற'வென இந்தியர்கள் இழுத்துச் சென்றனர்.



## லெப். கேணல் ஜோய்

(க. ரகுநாதன்)
செங்கலடி
02-02-1970
30-11-1991

மட்டக்களப்பின் அடர்ந்த காடுகளினூடு சிங்களப்படை பாரிய தாக்குதல் நடவடிக்கையில் இறங்கியிருந்தது.

3000 இற்கும் அதிகமான துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்ட இந்நடவடிக்கையின் பெயர், 'வட்டே நவும்'.

சிங்களப்படைக்கு ஒரு பதிலடி கொடுக்க வேண்டும் என்ற கருணா அம்மானின் வேண்டுகோளுக்கிணங்க - ஜோய் பதுங்கித் தாக்குதல் ஒன்றுக்குத் திட்டமிட்டான்.

21 வயதே உடைய ஜோய், தென்தமிழீழத்திலிருந்த எமக்குப் பாதகமான சூழ்நிலையை மாற்றவென, மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியத் தளபதியாக நியமிக்கப்பட்டு, தலைவர் அவர்களால் அங்கு அனுப்பப்பட்டான்.

பன்குடாவெளி, முதிரையடிஏற்றம் படைமுகாம்களிலிருந்து செங்கலடிக்கு வரும் ரோந்து அணி, ஜோயின் இலக்கானது.

29. 11. 1991 அன்று காலை 8.40 மணிக்கு ஆரம்பித்த சண்டை சில நிமிடங்களில் முடிந்தபோது - எதிரியின் ரவை ஒன்று, ஜோயை தொண்டைக்குக் கீழே துளைத்துச் சென்றுவிட்டது.

படுகாயமடைந்த தளபதியைத் தூக்கிக்கொண்டு புலிகள் பின்வாங்கினர். பல படையினர் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் எடுக்கப்பட்டிருந்தன.

புலிகளின் காட்டு முகாம்.

கழுத்துக் காயத்தின் வேதனையால் ஜோய் துடித்துக்கொண்டிருந்தான். ஒரு முழு நாளாக அந்த உயிர் போராடிக்கொண்டிருக்கிறது.

அருகிலே இருந்த கருணா அம்மானின் கையைப் பற்றிக்கொண்டு, முனகலுக்கிடையிலும் அவன் கூறிக்கொண்டிருந்தான் -

'' தலைவர் சொல்லிவிட்டதை முழுசா செய்து முடிக்கேலாமப் போட்டுதம்மான் .... அது ஒண்டுதான் எனக்குக் கவலையா இருக்கு...''

காயத்தின் ஆழத்தன்மையால் காயமடைந்த மறுநாள் அதிகாலையில் எம்மைப் பிரியும்போதுகூட, அவன் அது ஒன்றையே திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தான் -

'' தலைவர் சொன்னதை முழுசாச் செய்து முடிக்கேலாமப் போட்டுதம்மான் ..... அது ஒண்டுதான் எனக்குக் கவலையா இருக்கு .....''



## லெப். ரொனி

(யோ. சௌந்தரநாயகம்)
பரப்பாங்கண்டல்,
மன்னார்.
10-03-1965
14-11-1985

முற்றுகையிட முயன்ற சிங்களப் படையிடமிருந்து புலிகள் தப்பித்துக்கொண்டனர். ஆனால் மேஜர் அசோக் காயமடைந்துவிட்டான்.

இருந்ததோ இரண்டொரு றைபிள்கள் தான். எனவே, துரத்திக்கொண்டுவரும் எதிரியுடன் மோதுவது அவ்வளவு சுலபம் அல்ல. மேலே வட்டமிட்டுக் கொண்டு உலங்குவானூர்தி ஒன்று சுட்டுக்கொண்டிருந்த ரவைகள், புலிகளுக்கிடையில் தரையைக் கிளறிக்கொண்டிருந்தன. காயம்பட்ட அசோக்கோடு போராளிகள் பின்வாங்கிக்கொண்டிருந்தனர்.

வழியில் வெளியான பகுதி ஒன்று எதிர்ப்பட்டது. உலங்குவானூர்தியின் கண்களுக்குத் தப்ப உடனடியாக அருகிலிருந்த கட்டடத்திற்குள் புகுந்துகொண்டார்கள். எதிரி மிக அண்மித்துவிட்டான். உலங்குவானூர்தியிலிருந்து துப்பாக்கி சடசடத்துக் கொண்டே இருந்தது. தொடர்ந்து அங்கே நிற்கமுடியாது. அது ஒரு இக்கட்டான நிலை.

அசோக் முனகிக்கொண்டேயிருந்தான். ''என்னைப் போட்டிட்டு நீங்கள் தப்புங்கோடா .... '' என்று முனகலுக்கிடையே கத்தினான்.

முற்றிலும் பாதகமான நிலை ஒன்று அங்கு உருவாகி வந்தது. அவ்வேளை ரொனி சொன்னான், ''அண்ணை...... எனக்கு இரண்டு குண்டு தாங்கோ...... நான் அவங்களை திசை திருப்புறன். ஆமிக்காறரை என்னோட மினக்கெட வைக்கிறன். நீங்க அசோக் அண்ணையோட தப்புங்கோ.''

தான் தீர்மானித்தபடி ரொனி குண்டுகளை வாங்கினான்.

'கிளிப்'களைக் கழற்றினான்.

அது உடன் வெடிக்காதவண்ணம் 'லிவர்' அமுக்கியை தன்கைகளால் இறுக அழுத்தியபடி வெளியில் வந்தான்.

இந்த நிலையில் இராணுவத்தினரின் கவனத்தைத் தன்பக்கம் திசை திருப்ப எதிர்ப்புறமாக ஓடினான்.

எதிரியின் கவனம் ரொனி பக்கம் சென்றது.

இராணுவத் துப்பாக்கிகள் இவன் சென்ற திசையை நோக்கி ரவைகளைப் பொழிந்தன. இதற்குத் தன்னையே இலக்காக்கியபடி தன்னிடமிருந்த குண்டுகளை வெடிக்கவைத்துக் கொண்டிருந்தான் ரொனி.

மறுபக்கத்தால் வெளியேறிய தோழர்கள், வயல் வரப்புகளூடாக அசோக்கையும் இழுத்துக்கொண்டு ஊர்ந்துகொண்டிருந்தார்கள்.

காயம்பட்ட அசோக்குடன் மற்றையவர்கள் மீண்டுவிட்டார்கள்.

சகதோழர்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற இலட்சியவீறுடன், ரொனி தன்னையே அர்ப்பணித்துவிட்டான்.



## கப்டன் திலகா

(இரதிஸ்வரி)
சேனையூர், மூதூர்.
18-05-1970
03-08-1991

ஆனையிறவுப் பெருஞ்சமரின் இறுதிக் கட்டம்.

கட்டைக்காட்டிலிருந்து அங்குலமங்குலமாக நகர்ந்த எதிரி, அன்று - அகிலன் வெட்டையிலிருந்து தாக்குதலை ஆரம்பித்தான்.

எதிர்கொண்டு மோதிய புலிகளின் சேனையில், மகளிர் பிரிவின் ஒரு அணிக்குப் பொறுப்பாக இருந்து சண்டையை வழி நடாத்தினாள் திலகா.

'' செத்துப்போன ஒவ்வொரு போராளியையும் நினைச்சுநினைச்சு அடிபடுங்கோ '' - இப்படிச் சொல்லிச் சொல்லியே களத்தை நெறிப்படுத்தினாள்.

வானிலிருந்தும், தரையிலிருந்தும் எதிரி அகோரமாகத் தாக்கியபடி முன்னேறினான்.

திடீரென எதிரியின் எல். எம். ஜி. தாக்குதலொன்று திலகாவைப் படுகாயப்படுத்தியது.

களத்திலிருந்து வெளியேற்றப்படும் பொழுதும், திலகா கத்தினாள் - ''செத்துப்போன ஒவ்வொரு போராளியையும் நினைச்சு நினைச்சு அடிபடுங்கோ.''

விரைந்து செல்லும் 'அம்புலன்ஸ்' வண்டியொன்றினுள் சுயநினைவற்றுப் படுத்திருக்கும்போதும், திரும்பத்திரும்ப அவள் அதையே அரைகுறையாகச் சொன்னாள்,

வைத்தியசாலைக் கட்டிலில் மயக்கமுற்ற நிலையில், மெல்லமெல்ல அவளது மூச்சு நின்றுகொண்டிருக்கும்போதும், அவளது வாய் அதனையே உச்சரித்தது, ''செத்துப்போன...... ஒவ்வொரு...... போராளியையும்...... நினைச்சு நினைச்சு...... அடிபடுங்கோ......''



## லெப். இளங்கோ

(இ. மேரிதர்சன்)
திருக்கோணமலை
12-05-1985

இளங்கோ ஏற்கெனவே இரு குழந்தைகளுக்கு அப்பா.

இயக்கத்தில் சேர்ந்து பயிற்சி எடுத்துக்கொண்டிருக்கும்போதுதான் அவனது இரண்டாவது மழலைச் செல்வம் பிறந்தது.

அது 1986 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலம்; மட்டக்களப்பில் போராட்டம் அப்போதுதான் வேர்விடத் துவங்கியிருந்தது. தென்தமிழீழத்தைப் பொறுத்தவரை அவன் முதன்மையானவன்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆயுதங்கள் வரும் ஒவ்வொரு தடவையும், மூதூரிலிருந்து மட்டக்களப்பிற்கு அவற்றை எடுத்துச்செல்லும் பணியில் இளங்கோ இருப்பான்.

அன்று, அவனது மூன்றாவது குழந்தை பிறந்து பதினோராவது நாள். புறப்படவேண்டியிருந்தது. அவனது மனைவிக்குத் துணையாக, யாருமே இல்லை; ஆனாலும் புறப்பட்டான்.

புறப்படும்போது தன் மனைவியிடம் - 'போட்டுவாறன்...... நான் வந்ததுக்கு பிறகு மகளுக்கு என்ன பேர் வைக்கலாம் என்று தீர்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# தாய் மண்ணுக்காக.... தமிழ் மக்களுக்காக!

தண்ணீருக்கு நிறம் இல்லை, மணம் இல்லை, குணம் இல்லை என்று சொல்வார்கள். ஆனால், அந்தத் தண்ணீருக்கும் நிறம் உண்டு - சிவப்பு நிறம்; மணம் உண்டு - அது இரத்தவாடை; குணம் உண்டு - எந்த உண்மையையும் மறைக்க முடியாத நிலையைத் தோற்றுவிக்கும் தன்மை.

தமிழர்களாய்ப் பிறந்ததால் அதிலும் மானமுள்ள தமிழர்களாய் இனப்பற்றுடன் இருந்த காரணத்துக்காகக் கைதுசெய்யப்பட்டு, கும்புறுமுலையிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமுக்குக் கொண்டுசெல்லப்படுபவர்கள் இந்தத் தண்ணீரைக் காண்பார்கள். ஒரு பீப்பாயினுள் சகிக்க முடியாத நாற்றத்துடன் இருக்கும் இந்தத் தண்ணீருக்குக் கிட்ட ,இவர்கள் கொண்டுசெல்லப்படுவார்கள்.

''இதுதான் வில்லியத்தப் போட்டெடுத்த தண்ணி.''

இவ்வாறுதான் அது அறிமுகப்படுத்தப்படும். அதன் நிறத்தைப் பார்த்து அதன் வாடையை நுகர்ந்ததும், மறந்து போயிருந்த விடயங்களெல்லாம் நினைவுக்கு வரும். அவர்கள் தமக்குத் தெரிந்த உண்மைகளையெல்லாம் சொன்னார்களோ சொல்லவில்லையோ, அதிரடிப்படையினர் அதற்குள் போட நினைத்தால் போட்டெடுக்கத்தான் செய்வார்கள்.



''இப்படியா வெட்டுறது.....? இந்தா பார் எப்படி வெட்டுறதெண்டு ''

! அசுர வேகத்தில் இயங்கினான் அவன். எல்லோர் கண்ணெதிரிலும் வில்லியம் துடித்துத்...... துடித்து......

போட்டெடுத்து ..... போட்டெடுத்து...... எதிர்பார்க்கும் தகவல் கிடைக்கவில்லையெனில் போக்காட்டி விடுவார்கள் உயிரை.

''வில்லியத்தப் போட்டெடுத்த தண்ணி'' என்று விசேடமாகக் கூறுவதற்குக் காரணமென்ன? அவன் உயிரோடிருந்த காலத்தில் சிறீலங்காப் படையினரை கனவிலும் பயமுறுத்திக்கொண்டிருந்தான் அவனை உயிருடன் கைதுசெய்ய முடியுமென்று அவர்கள் ஒருபோதும் நினைத்திருக்க மாட்டார்கள் அவன் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியாமலிருந்தது. அந்தத் தாக்குதல்களில் உயிர் தப்பியவர்களுக்கு தாம் உயிரோடிருப்பதையே நம்பமுடியாமலிருக்கும். தாக்குதல் முடிந்ததும் வில்லியம் காற்றாக விரைந்துவிடுவான் அவன் போய்விட்டான் என்பதை உறுதிப்படுத்தியதும் இவர்கள் தமது அட்டகாசத்தைத் தொடங்குவார்கள். அப்போது இவர்களிடம் பிடிபடும் தமிழர்கள் ஏகோபித்த குரலில் கூறுவது இதைத்தான் -

''வில்லியம்தான் இதச் செஞ்சான்.''

'எதிரிக்கு நிச்சயமாகத் தெரியும் என்ற தகவலை அவனிடம் கைதியாக இருக்கும்போது மறைப்பதில் பிரயோசனமில்லை. எந்தளவுக்கு அவன் அறிந்து வைத்திருக்கிறான் என ஊகித்து அதற்கேற்றமாதிரிச் சொல்லி விடுவதே புத்திசாலித்தனம் - அதை மறைக்கப் போனால் எதிரி உயிர் போகும்வரை சித்திரவதை செய்துகொண்டேயிருப்பான். ஆகவே அதைச் சொல்லிவிடவேண்டும். அதைச் செய்வதன்மூலம் அவனுக்குத் தெரியாத பல ரகசியங்களைக் காப்பாற்ற முடியும் அத்துடன் கைதுசெய்யப்பட முடியாதவன் அல்லது மரணித்தவன் தலையில் எல்லாப் பழியையும் போட்டுவிடவேண்டும்' - இது கைதுசெய்யப்படுபவர்கள் கையாளும் பொதுவான தந்திரம். எனவேதான் கும்புறுமுலை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் எல்லோரும் இதைச் சொன்னார்கள்.

''..... இத எல்லாம் வில்லியம்தான் செஞ்சான்...... அவனுக்குத்தான் எல்லாம் தெரியும்.''

அப்போதெல்லாம் அவர்களிடம் படையினர் கேட்பார்கள். ''நாங்கள் வில்லியத்தப் பிடிச்சு உங்ககிட்ட கொண்டுவந்தா நீங்க என்ன செய்வீங்க .....?''

அப்போதெல்லாம் அவர்கள் எவ்வித தயக்கமுமின்றிக் கூறுவார்கள்:

''அவனைக் கொண்டு வாங்கையா. ..... அவன நாங்கள் நம்மடகையாலயே வெட்டிக் கொல்லுறம்......''

எந்தக்கட்டத்திலும் வில்லியம் உயிருடன் கைதாகமாட்டான் என திடமாக நம்பியதாலேயே, அவர்கள் அவ்வாறு கூறினார்கள். இதற்குமேல் ஏதாவது கூறமுடியுமென்று தெரிந்திருந்தால் அதனையும் கூறியிருப்பார்கள். அவர்களைப் பொறுத்தவரை எதையாவது சொல்லி அந்தச் சித்திரவதைக் கூடத்திலிருந்து மீண்டு வரவேண்டும்.

அப்போதெல்லாம் அவர்களுக்குத் தெரியவில்லை இந்த வார்த்தைகள் விபரீதத்தைக் கொண்டுவருமென்று.

• • •

வில்லியம்..... !

வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவனது இயற்பெயர் ஜீவராசா மட்டக்களப்பில் நடந்த முதலாவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவன் இவன். பயிற்சி முடிந்தவுடனேயே இவனுக்கு சிறீலங்காப் படையினருக்கெதிரான தாக்குதல்களில் பங்குபற்றவும் தனித்துத் தாக்குதல் நடத்தவும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன கிடைத்த வாய்ப்புக்களையெல்லாம் பயன்படுத்தினான். அவற்றை எந்த ஒரு காரணத்துக்காகவும் இவன் பின்போட்டதில்லை. உதாரணத்துக்கு ஒரு சம்பவம்......

11. 02. 1986 அன்று இவன் கல்குடா வீதியில் பேய்த்தாழை என்னுமிடத்தில் சிங்களப்படைகளை எதிர்பார்த்துக் காத்திருந்தான்; தனியாளாகத்தான் அங்கு நின்றான். அப்போது அந்த வீதி வழியாக அவனது தந்தை வந்துகொண்டிருந்தார். இவன் தனித்து அந்த இடத்தில் நிற்பதால் யாரையோ எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறான். என்று நினைத்தார் அவர். இப்போதெல்லாம் வெகு அபூர்வமாகத்தான் இவனைக் காணக் கிடைக்கிறது. இயக்கத்திற்குப் போனபின்பு இவனுடன் கதைக்கும் போதெல்லாம், யாரோ ஒரு பொதுமகனுடன் இவன் கதைப்பது போலத்தான் உணர முடிகிறது. ஒவ்வொரு வார்த்தையையும் நிதானித்துத்தான் கதைக்கிறான். 'நம்மடபுள்ளக்கி நாம துரோகம் பண்ணுவமா...... ஏன் இப்பிடி ஒட்டாமப் பழகுறான்......' என்று, அவர் பல தடவை நினைத்ததுண்டு - ஆனாலும் இவனிடம் எதையும் கேட்டதில்லை. கேட்டால் இந்தளவிற்கு இருக்கும் உறவைக்கூட முறித்து விடுவான் என்று பயம்.

இன்று கண்டாயிற்று. தனிய நிற்பதால் கூடிய நேரம் கதைக்கலாம் என்றொரு ஆசை - பாசம் மிதிவண்டியின் வேகத்தை அதிகரிக்கின்றது

இதோ கிட்ட...... கிட்ட...... மிகக்கிட்ட.

இதேவேளை பின்னால் கல்குடா பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சிங்களப்படையினரின் ஜீப் - அது இவரை முந்திவிட்டது. முன்னால் ஜீப் - பின்னால் தந்தை .. பெற்று வளர்த்து...... முத்தமிட்டு ..... தோளில் தூக்கி......

அதையெல்லாம் நினைக்க நேரமில்லை. தந்தைக்காக இந்தச் சந்தர்ப்பத்தை இழக்கத் தயாரில்லை அவன். எப்போது கழுத்தில் சயனைட் கட்டினானோ அந்தக் கணத்திலிருந்து அவன் இந்தத் தேசத்தின் புதல்வன். எனவே முடிவெடுத்து விட்டான்.

பயங்கரமான சத்தத்துடன் அந்தக் கண்ணி வெடி வெடித்தது. இதில் இரண்டு அதிரடிப்படை வீரர்கள் பலியாகினர். மூவர் காயமடைந்தனர்.

தாக்குதல் நடக்குமென்று படையினர் மட்டுமல்ல அவனது தந்தைகூட எதிர்பார்க்கவில்லை. எப்படியோ அதிர்ஷ்ட தேவதை அவருக்குக் கைகொடுத்தாள் இல்லாவிட்டால் அன்று அவர் உயிர் தப்பியிருக்க முடியாது. இதன்பின் அடிக்கடி கூறுவார் அவர்-

''என்னையும் பாக்காம எண்டமகன் இப்படிச் செஞ்சு போட்டான்.''

இக் கூற்றில் ஒரு தந்தையின் தவிப்பும் மகனைப் பற்றிய பெருமையும் இணைந்திருக்கும்.

• • •


13 01-1987 அன்று, வில்லியத்தை எதிர்பார்த்து வாழைச்சேனைப் பகுதியில் காத்திருந்தனர் சிறிலங்கா அதிரடிப் படையினர். காட்டிக்கொடுத்தவன் ஒழுங்காகத்தான் தகவல் வழங்கியிருந்தான் அன்று வில்லியத்துடன்சங்கரும் வந்துகொண்டிருந்தான் வில்லியத்தைப் போலவே இவனும் பல இடங்களில் இவர்களுக்கெதிரான தாக்குதல்களில் பங்குபற்றியவன் இன்று இருவருமே தமது கொலை வலைபத்திறுள் மாட்டிக்கொண்டதை நினைக்கச் சந்தோசமாக இருந்தது அவர்களுக்கு.

''பட்...... பட் ..... பட் .....'' அவர்களது துப்பாக்கிகள் சரமாரியாகப் பொழிந்தன சங்கரும் வில்லியமும் இதனைச்சற்றும் எதிர்பார்க்கவில்லை.

சங்கருக்கு தோளில் வெடி; வில்லியத்துக்கு முழங்காலில் வெடி வில்லியத்தால் ஓட முடியாது. அதற்காக அவனை அப்படியே விடமுடியாது அவனைத் தோளில் போட்டவாறே ஓடினான் சங்கர். படையினர் துரத்தினர் ஆனால் சங்கர் தப்பிவிட்டான் - தனது நண்பனுடன்.

இப்படியே நீண்டதூரம் சங்கரால் ஓடமுடியவில்லை அவனது காயத்திலிருந்து பெருந்தொகையான இரத்தம் வெளியேறி விட்டது. அவனுக்குச் சோர்வாக இருந்தது. அந்தக் கண்டகி கிராமத்தில் சின்னச் சின்னப் பற்றைகள் தான் இருந்தன. அவற்றினுள் வில்லியத்தைக் கிடத்தினான் இப்போது தேவை வைத்தியம். இதற்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு ஒரு ஆதரவாளனின் வீட்டிற்குள் புகுந்தான் சங்கர்.

படையினர் தேடினார்கள் - சங்கரும் வில்லியமும் மறைந்த வழி தெரியவில்லை: ஏமாற்றத்துடன் திரும்பிப் போய்விட்டார்கள். சங்கர் ஒரு வைத்தியரைச் சந்தித்தான். அவரையும் கூட்டிக் கொண்டு வில்லியத்தை நோக்கி விரைந்தான்.



லெப். வில்லியம்

[கிருபைராசா ஜீவராசா]

04. 11. 1962 14. 01. 1987

இதற்கிடையில், ''வில்லியத்துக்கு வெடிபட்டுட்டுது'' என்ற செய்தியறிந்து பலர் அவனைப் பார்க்கச் சென்றனர். இந்த இடத்தில் வில்லியம் இருப்பது ஆபத்தானது எனக் கருதிய அவர்கள், இன்னும் கொஞ்சத் தூரத்துக்கப்பால் பற்றை மறைவுக்குள் அவனைக் கிடத்தினார்கள். அவன் வேதனையில் முனகிக்கொண்டிருந்தான்.

மீண்டும் படையினர் வரலாம் அதற்குள் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லவேண்டும் இவனோ முனகிக்கொண்டிருக்கிறான். இந்த நிலையில் இவனுக்கு மயக்க ஊசி போடுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை அந்த வைத்தியருக்கு. சங்கர் வில்லியத்தைக் கொண்டு செல்வதற்கான ஏற்பாட்டில் மும்முரமாயிருந்தான். ஆனால் அவனைவிட இனத்துரோகி சுறுசுறுப்பாயிருந்தான் பொதுமக்களுடன் பொதுமக்களாகச் சென்று வில்லியத்தைப் பார்த்த அவன், நேரே படையினரின் முகாமுக்குச் சென்று அவர்களை அங்கே கூட்டிவந்தான்.

வில்லியம் நினைவு திரும்பாத நிலையிலேயே கைதுசெய்யப்பட்டான். சங்கரால் எதுவும் செய்யமுடியவில்லை யாரை நோவது? அன்றைய இரவு கண்ணீருடன் கழிந்தது.

• • •

சித்திரவதைகள் வில்லியத்தைச் சுயநினைவுக்குக் கொண்டு வந்தன. அவனது உடலில் மேலும் பல காயங்கள் உருவாகின. உடல் முழுவதும் இரத்தம். அந்த நிலையில் பீப்பாவிற்குள் போட்டெடுத்து போட்டெடுத்து ... தண்ணீர்தான் சிவப்பாகியதே தவிர வில்லியத்தின் வாயிலிருந்து எந்த வார்த்தையும் வெளிவரவில்லை.

• • •

வில்லியம் கைதான மறுநாள் ....

மீண்டும் கேட்டனர் கைதிகளிடம், ''வில்லியத்தப் பிடிச்சுக்கொண்டு வந்தா என்ன செய்வீங்க?''

(04ஆம் பக்கம் பார்க்க)

# இந்துமாகடலில் காலூன்ற சீனா முயல்கின்றதா?

சோவியத் ஒன்றியத்தின் சிதைவுக்குப் பின்னர் தோன்றிய புதிய உலக ஒழுங்கில் அமெரிக்க தேசம், தட்டிக்கேட்க முடியாத தனிப்பெரும் வல்லரசாகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டு விட்டது. இந்தத் தனிக்காட்டு இராஜாவுக்கு சவாலாக இஸ்லாமிய உலகம் அணி திரளும் என்றொரு பயம், அமெரிக்காவுக்கு எழுந்திருந்தது. 'இது மேற்குலகம் வேண்டுமென்றே மிகைப்படுத்திக் காட்டிய பார்வை' என, சில அரசியல் அறிஞர்கள் அடித்துக் கூறுகின்றனர்.

ஆனாலும் அமெரிக்க வல்லரசுக்கு சவாலாக, அடுத்த நூற்றாண்டில். ஒரு பதிய வல்லரசு ஆசியாக் கண்டத்திலிருந்து எழுந்து நிற்கத் தயாராக உள்ளது என, இப்போது அமெரிக்கா அஞ்சுகிறது. உலக சனத்தொகையில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதி மக்களையும், அரிய பல வளங்களுடன்கூடிய பிரமாண்டமான நிலப்பரப்பையும் கொண்ட சீனதேசமே அதுவாகும். டெங் - சியாவோ - பிங் தலைமையில் தன்னை ஒரு போட்டி வல்லரசாக வளர்த்துக்கொள்ள, திரைமறைவில் சீனா பல முயற்சிகளை எடுத்து வருகின்றது மேற்குலகின் பரமவைரியான இஸ்லாமிய நாடுகளை அரவணைத்தபடியும் கட்டுப்பாடில்லாத வகையில், உலகளாவிய ரீதியில் ஆயுத தளபாட வர்த்தகத்தில் ஈடுபட்டும், சீனா அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தன்னைப் பலப்படுத்தி வருகின்றது. அதேவேளை தாராள பொருளாதாரக் கொள்கையை நாணயக் கயிற்றுடன் நாட்டிற்குள் உலாவரவிட்டு, மேற்குலக நாடுகளையும் தன்வசப்படுத்தி அவற்றிடமிருந்து தொழில்நுட்ப அறிவையும் பொருளாதார நன்மைகளையும் பெற்று, ஒரு பலமான தேசமாக மாற சீனா அமைதியாக வேலை செய்கின்றது.

வல்லரசாக வளரமுயலும் சீனாவின் இந்த முயற்சிக்கு முதற்களமாக இந்துமா சமுத்திரம் உள்ளாகலாம் என்ற ஐயம் இப்போது எழுப்பப்பட்டுள்ளது.

இதுவரையிலும் பெரிதும் அனுபவிக்கப்படாது குவிந்துகிடக்கும் இம்மாகடலின் மாபெரும் வளமும், இந்துமாகடலின் 'பிரதான வல்லரசான' இந்தியாவுடன் ஒப்பிடும்போது சுலபமாக இராணுவ மேலாண்மையை நிலைநிறுத்த முடியும் என்ற நம்பிக்கையும் ஒன்று சேர்ந்து, இந்துமாகடலில் காலூன்ற சீனாவைத் தூண்டியுள்ளன.

71 கோடி சதுரகிலோமீற்றர் பரப்பளவைக்கொண்ட, உலகின் இரண்டாவது பெரிய சமுத்திரமாகிய இந்துமாகடலை, வாலாற்றில் முதன்முதலில் ஆதிக்கத்தில் வைத்திருந்தது சோழப்பேரரசுதான். கி. பி. 10ஆம் நூற்றாண்டில் இந்துசமுத்திரத்தின் கிழக்குப்பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்தபடி, தென்கிழக்காசிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் சோழப் பேரரசு வாணிபத்தில் ஈடுபட்டது. இவ்வாணிபத்தைப் பாதுகாக்கவும், பேரரசைக் கட்டியெழுப்பும் நோக்குடனும், தமிழரின் பெரியதொரு கப்பற்படை இம்மாகடலில் தண்டு வலித்துத் திரிந்தது.
சோழப் பேரரசின் வீழ்ச்சியின் பின் இந்துமாகடல் அராபயர் வசமாயிற்று.

அதன்பின் டச்சுக்காரர்களும், போர்த்துக்கேயர்களும், பிரான்சுக்காரர்களும் ஆதிக்கம் செலுத்தினர்.


இறுதியில் ஆங்கிலேயர்கள் இந்துமாகடலை முழுமையாக ஆண்டார்கள்.

'பனிப்போர்'க்காலத்தில் அமெரிக்காவினதும் சோவியத்தினதும் போட்டிக்களமாக இருந்த இம்மாகடல், பனிப்போர்முடிவுடன் இராணுவ சலசலப்பை இழந்தது. அதன்பின் இம்மாகடலின் காவல்காரனாக இந்தியா தன்னைத் தானே கருதிக்கொண்டது.

இந்து சமுத்திரம் ஆசிய, ஆபிரிக்க, அவுஸ்திரேலிய மற்றும் அண்டாட்டிக் கண்டங்களுக்கிடையில் அமைந்துள்ளது. இம்மாகடலைச் சூழவுள்ள 48 நாடுகள் (தமிழீழம் உட்பட) இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகள் என அழைக்கப்படுகின்றன.

இவை ஐந்து புவிசார் அரசியல் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. கிழக்காபிரிக்கப் பிராந்தியம்.
2. அவுஸ்திரேலியப் பிராந்தியம்.
3. தென்மேற்காசியப் பிராந்தியம்.
4. தென்கிழக்காசியப் பிராந்தியம்.
5. தென்னாசியப் பிராந்தியம்.




இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் சீனா அடங்கவில்லை. கடல் வழியாக இந்துசமுத்திரத்திற்கும் சீனாவுக்கும் நேரடித்தொடர்பும் இல்லை.

சீனா ஒரு பசுபிக் பிராந்திய நாடாகும்.

இன்று சீனா முதலாளிய உலகின் போக்கிற்கு ஏற்ப வளைந்து கொடுக்கும் ஒரு பொருளாதாரக் கொள்கையையும், அதேவேளை மிகவும் கட்டுப்பாடான இறுக்கமான உள்நாட்டு அரசியல் கொள்கையையும் பயன்படுத்தி, அதிவேகமாக வளர்ச்சிகண்டு வருகின்றது.

இந்த வளர்ச்சியை மேலும் மேலும் உயர்த்தக்கூடிய வசதியும், வளமும், பாதுகாப்பும் பசுபிக்கிலில்லை.

அத்துடன் தரையில் வளங்களைத்தேடி படைகள் போன காலம் போய், கடலில் வளம் தேடும் காலம் இது.

எனவேதான் அமெரிக்க, யப்பானிய மற்றும் ரஷ்ய வல்லரசுகளின் ஆதிக்கத்தில் ஏற்கெனவே இருக்கும் தனது சொந்த சமுத்திரத்தை விட்டு, வளம் நிறைநத்தும் அதன் இராணுவ பலத்திற்கு உட்பட்டதென அது கருதும் இந்துமாசமுத்திரத்தில் ஆதிக்கம் பெற விரும்புகின்றது.

இந்த நோக்குடன் தனது நாட்டுடன் தரை எல்லைகளைக்கொண்டதும் - இந்துமாகடல் நாடுகளுமான பர்மாவையும், பாகிஸ்தானையும் சீனா தன்வசப்படுத்தும் வேலைகளில் இறங்கியுள்ளது.

## உலகவலம்

இந்துமாகடலில் உள்ள பர்மாவுக்குச் சொந்தமான இரண்டு தீவுகளில் பர்மாவுக்கென இரு இராணுவ நிலைகளை சீனா அமைத்துக் கொடுக்கின்றது.

ஒரு தீவில் சக்தி வாய்ந்த 'றாடர்' நிலையமும் மறுதீவில் பாரிய கடற்படைத்தளத்தையும் சீனா அமைத்துக் கொடுக்கின்றது. அதேவேளை பர்மிய இராணுவத்திற்கு பெருமளவில் இராணுவ உதவிகளையும் வழங்கிவருகின்றது. இத்தனைக்கும் பர்மா வெளியில இருந்து அச்சுறுத்தல் எதையும் இதுவரை சந்திக்கவில்லை. உள்நாட்டிலும் கெரில்லாப் போராட்டம் நடாத்தும் சாதாரண போராளிக்குழுக்களே அரசபடைகளை எதிர்த்துப் போராடுகின்றன.

எனவே பர்மாவுக்கு இந்தப்பாரிய இராணுவ உதவிகளை ஏன் சீனா செய்து கொடுக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது அத்துடன் பர்மிய - சீன எல்லையோரமுள்ள பெருந் தெருக்களைப் புனரமைக்கவும் ரயில் போக்குவரத்துக்களை அபிவிருத்தி செய்யவும் சீனா உதவிகளைச் செய்துவருகின்றது.

இதேபோன்று முன்னர் பாகிஸ்தானுடன் சீனா புதிய தரைப் பாதைகளை அமைத்துவைத்திருக்கின்றது. அவசியம் ஏற்பட்டால் இந்தத் தரைப்பாதைகளைப் பயன்படுத்தி இந்துமாகடலை அடைய சீனா திட்டமிடுகின்றது என்றே கண்ணோட்டக்காரர்கள் கூறுகின்றனர். அதேவேளை பாகிஸ்தானின் அணுசக்தி முயற்சிக்கும் சீனா உதவிகளைச் செய்து வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்திய படைபலத்திற்கு நிகராக பாகிஸ்தானுக்கு இராணுவ தளபாடங்களைச் சீனா வழங்கியும்வருகின்றது

இவை எல்லாம் உள்நோக்கம் வைத்துச் செய்யப்படும் வேலைகள் என்பதை, சீனத்தலைவர்களின் உள்ளக்கிடக்கையைப் புரிந்துகொண்டவர்களால் தெரிந்துகொள்ளமுடியும்.

பர்மாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இந்துமாகடலில் இருக்கும் சட்டபூர்வ உரிமைகளைப் பயன்படுத்தி, அந்த நாடுகளுடன் இணைந்து இந்துமாகடலில் காலூன்ற, சீனா முயற்சிசெய்கின்றது தேவை ஏற்பட்டால் பலத்தைப்பயன்படுத்தி ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் இலக்குடனேயே பர்மா பாகிஸ்தானை இராணுவமயப்படுத்தி வருவதுடன் பர்மிய தீவுகளில் சக்தி வாய்ந்த கடல் தளங்களையும் நிறுவுகின்றது.

இது ஒருபுறமிருக்க, சோவியத்தின் முன்னாள் குடியரசுகளில் ஒன்றாகிய உக்ரேனிலிருந்து ஒரு பாரிய கடற்படைக்கப்பலைக் கொள்வனவு செய்ய, சீனா பெரும் முயற்சி செய்தது ஆனால் அது கைகூடவில்லை.

இவை எல்லாம் கடலாதிக்கத்தை மனதில் வைத்து சீனா செய்த முன் முயற்சிகள் ஆகும்.

இந்துமாகடலில் காலூன்றமுனையும் சீனாவின் எண்ணத்தை 'வாசலில் ட்றகன்' என்ற தலைப்பிலான கட்டுரைமூலம், அண்மையில் வெளிவந்த ஏசியாவீக் சஞ்சிகையும் சுட்டிக்காட்டியுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் இந்தியாவைப் பின்தள்ளிக்கொண்டு இந்துமாகடலில் ஆதிக்கம் செலுத்துவதற்காக, இந்தியாவின் இருமருங்கில் உள்ளதும், அதனுடன் பகைமையுணர்வும் கொண்டுள்ளதுமான இருநாடுகளையும்(பர்மா, பாகிஸ்தான)சீனா பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது.

உலக சோசலிச முகாமில் பேரழிவை ஏற்படுத்திய 'மாற்றம்' எனும் ஊழிக்காற்றில் சீனாவைச் சிக்கச் செய்யாது இலாவகமாகவும், புத்தி சாதுரியமாகவும் சீனத் தலைமை செயற்படுகின்றது.

"அடுத்த நூற்றாண்டில் இது பெரிய பதற்றத்தை உண்டுபண்ணும்" என்று, இந்திய பாதுகாப்புத் துறையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உறுதியான தேசியத்தலைமை இன்றியும் இன - மதமோதல்கள் அதிகரித்ததால் எழுந்துவரும் அரசியல் பூகம்பங்களினாலும் நிலைகுலைந்துவரும் இந்தியப்பேரரசிற்கு, சீனாவின் சந்தேகத்திற்குரிய நிலைப்பாடுகள் மேலும் மேலும் அச்சுறுத்தலைக் கொடுத்தபடியுள்ளன.

இதனால் அண்டை அயல் நாடுகள் மீதான சண்டித்தனங்களில் ஈடுபடுவதை விடுத்து, தனது சொந்தப் பாதுகாப்பு பற்றி சிந்திக்கவே இந்தியாவுக்கு இனி நேரமிருக்கும். இல்லாவிடின்(வரை பட. ரீதியாக) 'குறடு'க்குள் அகப்பட்ட விரல் போல எதிர்காலத்தில் இந்தியப்பேரரசு நசுங்கலாம்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் மாவீரன் நெப்போலியன் கூறினான்: "சீனா எனும் இராட்சதன் தூங்குகின்றான், தூங்கட்டும்; அவனைத் தட்டியெழுப்ப விடாதிர்கள்."

அப்போது சீனா இதற்குப் பதில் கூறவில்லை; பேசாதிருந்தது.

'உலகில் பெருவளர்ச்சி கண்ட நாடுகளில் சீனா மூன்றாவது இடத்திற்கு (அமெரிக்கா, ஜப்பானுக்கு அடுத்ததாக) வந்துவிட்டது என, அண்மையில் உலக நிதி நிறுவனம் ஒன்று சீனாவுக்குச் சான்றிதழ் கொடுத்தது.

உடனடியாகவே சீனா இதற்குப் பதிலளித்தது-"இது மிகைப்படுத்தப்பட்டதொரு அறிக்கை. நாங்கள் (சீனா) இப்போதும் மூன்றாம் மண்டல நாடாகவே இருக்கின்றோம்" என்றது.

சீனா தனது வளர்ச்சியை மறைத்தபடி மேன்நிலையை அடைய முயல்கின்றது. தூங்குவதுபோல பாவனை செய்துகொண்டு, உலக வல்லரசாகமாற முயல்கின்றது. ○

# காந்தரூபன் அறிவுச்சோலை

## தேசத்தின் சிற்பிகளை உருவாக்கும் பட்டறை

ஆறுவயதுக் குழந்தை. அருகே அவனது மூன்று வயதான தம்பி இருவரும் நிமிர்ந்த மலர்களாய்த் தெரிந்தனர்!

'அனாதைகள்' என எண்ணி இங்கு பரிவுகொள்ள இருந்த என் உள்ளம் தலை குனிந்தது. ஓர் உறுதிப்பாடு என் உள்ளத்தில் எழுவதை உணர்ந்தேன்.

நாங்கள் நெடுநாள் எண்ணிப் பழகிய 'அனாதை' இல்லமோ அதன் பரிணாம வழிவந்த சிறுவர் பராமரிப்பு நிலையமோ அல்லது தரும சிந்தனையுடன் நடாத்தப்படும் சில சிறுவர் கூடத்தின் சாயலோ இங்கு தென்படவில்லை.

அச்சமோ ஏக்கமோ தெரியாத அறிவுச்சோலையில் நின்றேன்! அது குழந்தைகளின் சூழல். வாழத் தொடங்கிவிட்ட சிறுவர்களின் சூழல்.

நான் நின்ற இடம் -

தலைவர் பிரபாகரன் அவர்களால் இம்மாதம் ஆரம்பிக்கப்பட்ட 'காந்தரூபன் அறிவுச்சோலை.'

''இவர்கள் தமிழன்னையின் குழந்தைகள். இந்தக் குழந்தைகளை நான் அனாதைகளாகக் கருதவில்லை.

வளரப்போகும் இவர்கள், எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாகத் திகழ்வார்கள் என்பது திண்ணம்''

தலைவரின் இந்த உறுதி வார்த்தைகள் ஏற்கெனவே 'செஞ்சோலை' என, பெண் குழந்தைகள் தளிர் விட்டு உயரும் வளர் நிலமாக உருவாகிவருவது தெரிந்ததே.

இதன் அடுத்த கட்டமாக அமைந்துள்ளது இந்த 'அறிவுச்சோலை.' இதில் தென் தமிழீழத்தின் ஆண்குழந்தைகள் உட்பட இவ்வருடத்துள் முந்நூறு பிள்ளைகள் வந்து சேர்வர் என, இந்த அறிவுச்சோலையின் பொறுப்பாளர் திரு. ரமேஸ் கூறினார்.

ஒரு குழந்தையை இவர் அழைத்தபோது அது ஓடிவந்து இவரது மடியில் அமர்ந்துகொண்டது; சற்றுத் தூரத்தே இன்னொருகுழந்தை இதனுடன் போட்டிக்கு நின்றது.

'' இவர்கள் வேண்டுவது அன்பின் அரவணைப்பே '' என அந்தப் பொறுப்பாளர் - இளைஞர் விளங்கப்படுத்தினார்.

" இவனை சிரித்த முகத்தோடு தான் நான் தூக்கிவந்தேன். எதுவும் அறியாது சிரித்துக்கொண்டிருந்தான் இக்குழந்தை '' என, மேலும் தம் நெஞ்சத்தைத் திறந்து கூறிக்கொண்டிருந்தார். குழந்தை வேறொரு பாதுகாப்பு இடத்திலிருந்து இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை உணர முடிந்தது.

குழந்தைகள் எத்தகைய ஆபத்தான, துயரமான நிலைகளிலிருந்தெல்லாம் மீட்கப்பட்டிருக்கின்றன என்பதை வினவியபோது, அவற்றை மிகச் சுருக்கமாக தேவையான அளவுமட்டும் கூறினார். குழந்தைகளுக்கு இவை கூறப்படுவதே இல்லையாம். அதற்குப்பதிலாக இந்தத் துயரக் கோவைகள் இப் புதிய சூழலில் மெதுவாக மறக்கவைக்கப்படுகின்றன. இது நாம் நன்கு உணரவேண்டிய உளவியல் உயர்வுகளில் ஒன்று.

இது தரும் ஆக்கத்தை இங்கு பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த பிள்ளைகளின் மலர்ந்த முகத்திலிருந்து புரியமுடிந்தது. இப்பிஞ்சுகளுக்கு நடந்த துயர நிகழ்வுகளை இவ்வேளை, எம்முள் நாம் எடைபோட்டுப் பார்ப்போமா?

ஏழாலையில் வெடித்த எதிரியின் எறிகணை ஒன்று. அன்றிரவு பெற்றோர் இருவரையும் பலிகொள்ளத் தவறவில்லை இந்தக் கொடுமைக்குத் தப்பிய குழந்தைகள் இருவர் இந்த அறிவுச்சோலை இல்லத்தில் வளர்வதைக் காண்கின்றோம்.



"இந்தக் குழந்தைகளை நான் அனாதைகளாகக் கருதவில்லை; இவர்கள் தமிழன்னையின் புதல்வர்கள்."

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இன்னொரு தந்தை இலங்கை இராணுவத்தினரால் சுடப்பட்டார். நலிந்த தாயும் சிறிது காலத்துள் இறந்தாள். குழந்தை அனாதையா? இல்லை - இங்கு தாய்போலப் பார்ப்போரிடையே குழந்தை நன்கு வாழ்கிறது.

இதே இடத்தில் இன்னொரு தந்தை போராட்டத்தில் பங்களித்ததற்காக தேசத் துரோகிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரது ஒன்பது வயதுப் பாலகன் இன்று அறிவுச் சோலையின் பாடசாலையில் கல்வி பயின்றுவருகின்றான்.

பருத்தித்துறையிலிருந்த வேறொரு பெண்பிள்ளை செஞ்சோலையில் பயில்கின்றாள். இவளின் 13 வயதான அண்ணன் இங்கு அறிவுச்சோலையில் ஆண்டு 8 படிக்கின்றான். இவர்களுக்கு நடந்தது என்ன? தந்தை வேலைக்குப் போகும் வேளையில் இலங்கை இராணுவத்தினரால் சுடப்பட்டார். தாய் விமானக் குண்டுவீச்சுக்குப் பலியானாள். ஆயினும் இந்த எதிரியின் செயல் எம்மை அழித்துவிடப் போவதில்லை. எம் விடுதலைக்கு இவை உரமாவதே உண்மை!

எதிரியின் கொடுமையிலிருந்து விடுபடுவது மட்டும் போதாது. ஏனைய சமுதாய நலிவுகளிலிருந்தும் நாம் விடுபட வேண்டும். பலம்பெற வேண்டும்.

ஏதோ காரணத்தால் தந்தை, தாய் இருவரும் இன்னொரு ஊரில் நஞ்சுண்டு இறந்ததை அறிகிறோம். அவர்களது மைந்தன் இன்று இங்கு புதுவாழ்வில் வளர்கிறான்.

இங்கு ஆண்டு மூன்றளவில் படிக்கும் இன்னொரு மாணவன், இடைக்காலத்தில் தெருக்கரையில் பாடித்திரிந்து பணம் தேடும் நிலையில் இருந்தானாம். எம் காவல்துறையினரோ எவரோ கண்டெடுத்து கைமாறியபின், இன்று இவன் இந்த அறிவுச்சோலையின் புதுவாழ்வில் மலர்கிறான்.

இங்கு பாலகர்கள் அடித்து ஏசி எழுப்பப்படுவதில்லை! இவர்களுக்கெனத் தம்மை அர்ப்பணித்து வாழும் தாய்மார் உளர். உணவு ஊட்டப்படவேண்டிய குழந்தைகளை இவர்கள் கவனிக்கின்றனர். இவர்களோடு ஆசிரியர்களும் பலர் உளர். பொறுப்பாளருடன் ஏனைய தொண்டர்கள், பணியாளர்களின் பங்களிப்பு இங்கெழும் ஏராளமான வேலைகளைச் சமன்செய்து, மேலும் ஆக்கவளர்ச்சிக்கு இட்டுச்செல்கிறது.

வளரும் பிள்ளைகளுக்கு உடல் நலன் முக்கியம்; உணவு முக்கியம். இங்குள்ள பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் பால்கொடுபடுகிறது. அதுபோல முட்டையும் கொடுபடுகிறது. இவை ஏனைய நல்லுணவுடன்கூடிய சத்துணவாகக் கொடுபடுகின்றன. காலையில் குளிப்பு. பின்னர் காலை உணவு. அதன்பின்னர் பாலர் வகுப்பிலிருந்து ஆண்டு எட்டுவரை பாடசாலை. நண்பகல் உணவின் பின் ஓய்வு, உறக்கம். மாலையில் விளையாட்டு, விரும்பிய உடலுழைப்பு, தேகப்பியாசம். இரவு, தகுந்த வழிகாட்டலின் கீழ் பிள்ளைகள் சுயமாகப் படிக்கவிடப்படுகிறார்கள். இது சுய வளர்ச்சியை ஊக்குவிக்கும் அறிவுச்சோலை அல்லவா!

பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளுக்கு இரவு உணவின் பின் பல் துலக்கல், தூக்கம், தன் கோப்பையைத் தானே கழுவுதல் முதலிய நெறிகளும் இங்கு பயிற்றப்படுகின்றன. தன்தன் வேலையைத் தானே செய்தல் என்ற பயிற்சியே இதன் நோக்கம்.

இவ்விதமாக இயங்கும் காந்தரூபன் அறிவுச்சோலையானது வருங்கால வளர்ச்சிக்கு ஏற்ற விசால இடத்திலேயே அமைந்துள்ளது. அகன்ற மாந்தோப்பு அழகு செய்கிறது எட்டு 'இல்லங்கள்' காணப்படுகின்றன. இதைவிட நீண்ட பாடசாலைக் கட்டடமும் காட்சி தருகின்றது. குழந்தைகளின் - விளையாட்டுப் பிள்ளைகளின் - குரலொலி உயிரூட்டுகின்றன. இதுதான் காந்தரூபன் அறிவுச்சோலை!

சரி, யார் இந்தக் காந்தரூபன்?

அவன் ஒரு கரும்புலி. வடகடலில் கொடுமை செய்த பகைவனின் கப்பலுடன் மோதிச் சங்கமமான கரும்புலிகளில் ஒருவனே இந்தக் காந்தரூபன்! இவன் எவருமறியா அனாதையாய் வல்வெட்டித்துறைக் கரையில் நின்றபோது, திரு. யோகராஜா என்பவரால் கூட்டிச் செல்லப்பட்டான். பல வருடங்களின் பின் பிறந்த தனது முதல் பிள்ளையை இவர், தனது இரண்டாவது மகனாகவே கருதினார். காந்தரூபனையே மூத்த மகனாகக் கொண்டிருந்தார்.

நாட்கள் ஓடின. காந்தரூபன் ஒரு விடுதலைப் புலியானான். மணலாற்றுக் காட்டில் தலைவரது நேரடித் தொடர்புக்கும் பாசத்திற்கும் உள்ளாகும் பெரும் பேறையும் பெற்றான். காந்தரூபன் தன்னைக் கரும்புலி வரிசையில் இணைத்துக் கொள்ளுமாறு தலைவரவர்களை வேண்டினான். அத்துடன் தலைவரிடம் பணிவும் பாசமும் பொருந்திட இன்னொன்றையும் கேட்டான் -

'' அண்ணை...... நான் எம் இனத்திற்காகப் போய்விடுவேன். நான் 'அனாதை' யாய் இருந்தவன். அனாதைகளின் மனத்து வேதனைகளை - அல்லல்களை - உணர்ந்தவன். இப்படியான வேதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவிக்காது தடுக்க நீங்கள்தான் அவர்களுக்கு ஒரு வழி சமைத்துக் கொடுங்கோ.''

இந்த இறுதி வேண்டுகோள் தலைவரின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்தது. ஏற்கெனவே தலைவரிடம் இருந்த இப்படியான சிந்தனைக்கு இது மேலும் உறுதி கொடுத்தது.

இத் தீர்மானம் செயலாகியது; காந்தரூபன் அறிவுச்சோலையை - இதோ - எம் கண்முன் காண்கிறோம்!

தனிக்குடும்ப உறவுகளைக் கடந்த பரந்த சூழலில் இக் குழந்தைகள் வாழ்கின்றனர்.

அறிவாளர்களை - துணிவாளர்களை - மண்பற்றும் மக்கள் பற்றும் கொண்ட பணியாளர்களை இது நிச்சயம் உருவாக்கும்.

தலைவர் கூறியுள்ளதைப் போல எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாக இவர்கள் திகழ்வார்கள் என்ற ஒரு புதிய வரலாறு இங்கு உருவாகி வளர்கிறது; செயலாகிறது.

-பெருவழுதி

# விதைக்கப்பட்டது வீரமும்தான்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி......)

மாளிப்பம்......'', என்றுதான் சொல்லிவிட்டு வந்தான்.

''என்னைப்பற்றி யோசிக்க வேண்டாம். நான் சமாளிச்சுக் கொள்ளுவன்; நீங்கள்தான் கவனம்'' என்றுதான் அவள் வழியனுப்பிவைத்தாள்.

தனது பிள்ளைகள் மூன்றையும் அவன் கட்டி அணைத்து முத்தமிட்டபோது - அவை தன் கடைசி முத்தங்கள் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை.

வெருகல் துறைமூலம் அவன் அடிக்கடி பயணிப்பதை அறிந்த இராணுவம், ஆற்றோரத்தில் அன்றும் பதுங்கியிருந்தது.

மூதூருக்குத் திரும்பிக்கொண்டிருந்த அவனும், கஜேந்திரனும் அவர்களின் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

கஜேந்திரனைத் தப்பி ஓடச்சொல்லி விட்டு, தன்னிடமிருந்த எஸ்.எம்.ஜிமூலம் இளங்கோ இராணுவத்துடன் சண்டையிடத் தொடங்கினான்.

அதே இடத்தில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொதுமகன் ஒருவர், இந்தச்சம்பவத்தைக் கதைகதையாகச் சொல்லுகின்றார்.

''இளங்கோ அண்ணை சண்டையிட்டார்; ரவைகள் திரும்வரை சண்டையிட்டார். தனது துப்பாக்கி எதிரியிடம் கிடைக்கக்கூடாது என்பதற்காக, எஸ் எம். ஜியைப் பகுதி பகுதியாகப் பிரித்து, பொங்கிப் பெருகும் வெருகல் ஆற்றில் வீசி எறிந்தார்.

நிராயுதபாணியாக நின்ற அவரை உயிரோடு பிடித்துவிடச் சிங்களப்படை ஆவேசமாக எழுந்து பாய்ந்தபோது, இளங்கோவை சயனைட் பாதுகாத்தது.



## ரஞ்சன்

(சரவணமுத்து சத்தியசிலன்)
வவுனிக்குளம்,
முல்லை.
08-05-68 — 11-03-86

ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் - வானூர்திகளிலும், கவச வண்டிகளிலும் வந்திறங்கி துணுக்காயை முற்றுகையிட்டனர்.

மூன்று நாட்கள் இந்தப் பாரிய முற்றுகை நடந்தது.

அந்த முற்றுகையின் இரண்டாம் நாள்.

அனிச்சங்குளத்தில் காத்திருந்து படையினரின் வண்டித் தொடர்மீது கண்ணிவெடித் தாக்குதல்நடாத்திய ஜீவாவும் ரஞ்சனும், நடந்து வந்த இராணுவத்தினரின் வளைப்பற்குள் அகப்பட்டுக்கொண்டனர்.

ஆயிரக்கணக்கான படையினருக்கு நடுவில் அவர்கள். தூரத்திலிருந்த எம்மால் எதுவுமே செய்ய முடியாத நிலை. 'வோக்கி'த் தொடர்பு மட்டுமே எங்களுக்கிடையில் இருந்தது.

அவர்களிடமிருப்பது ஓரேயொரு றைபிள்தான் என்பதையும், அவர்கள் இருவர் என்பதையும் மிகச்சரியாக ஊகித்துக்கொண்ட எதிரி - உயிரோடு பிடிக்கும் நோக்கம் கொண்டு, ரவைகளைப் பொழிந்தபடி வட்டமாக நெருங்கினான்.

ஜீவா தனது எஸ். எல். ஆரால் சுட்டுக்கொண்டேயிருந்தான்.

''கடைசி ரவை இருக்கும் வரை நாங்கள் சண்டையிடுவோம்...... எம்மைப்பற்றி எதுவும் யோசிக்கவேண்டாம்.....'' வோக்கியில் அவனது குரல் தளம்பலின்றி ஒலித்தது.

சண்டை தொடர ரவைக்கூடுகள் வெறுமையாகின,



## ஜீவா

(கந்தையா கெங்காதரன்)
பெரியதம்பனை,
செட்டிகுளம்,
வவுனியா.
27-10-64 — 11-03-86

''ரவை முடிந்துவிட்டது. இனி எங்களுக்கிது பயன்படாது. ஆனாலும், றைபிளை அவன்களின்ரை கையில கிடைக்கவிடமாட்டன்.''

நிதானமாக 'வோக்கி'யில் சொல்லியவன், அருகில் இருந்த மரத்தோடு எஸ். எல். ஆரை அடித்து நொருக்கினான்.

இப்போது அவர்களிடமிருப்பது 6 குண்டுகள். ஒவ்வொன்றாக வீசத் தொடங்கினார்கள்.

எதிரிகள் நெருங்கிக்கொண்டிருந்தார்கள். அவை தங்களது கடைசி நொடிகள்தான் என்பது ஜீவாவுக்கும், ரஞ்சனுக்கும் தெரியும். ஜீவா கழுத்தைத் தடவினான். சயனைட்டைக் காணவில்லை; ரஞ்சனிடமும் இல்லை.

''எங்களிடம் குப்பி இல்லை. ஆனாலும் உயிருடன் பிடிபடமாட்டோம்....." -ஜீவாவின் குரல் உறுதியோடு 'வோக்கி'யில் ஒலித்தது.

நாங்கள் உறைந்துகொண்டிருந்தோம். எதுவுமே செய்யமுடியாத நிலை; எதுவுமே சொல்ல முடியாத நிலை. ஒவ்வொரு தடவையும் - அவர்கள் பதிலுக்காய் காத்திருக்கவுமில்லை.

''என்ன செய்ய......?'' என்று அவர்கள் கேட்கவில்லை;''இன்னது செய்கிறோம்.....'' என்றுதான் சொன்னார்கள்.

5 குண்டுகள் வீசப்பட்டன. எஞ்சியிருப்பது ஒன்றே ஒன்று. அந்தக் கடைசி மணித்துளிகளிலும், ஜீவா தெளிவாகவும் உறுதியாகவும் 'வோக்கி'யில் கதைத்தான்.

''நாங்கள் புலிகள். ஒரு புனிதப் பாதையில், தியாகத்தின் அடிப்படையில் தலைவர் எங்களை வளர்த்தார். எங்கள் வீர மரபுக்கிணங்க எம்மை நாமே அழித்துக்கொள்கிறோம். எம்மிடமிருக்கும் ஒரேயொரு குண்டு அதைச் செய்யப்போகிறது. நாங்கள் கட்டிப் பிடித்துக்கொண்டு, எங்களுக்கிடையில் வைத்து குண்டின் கிளிப்பைக் கழற்றுகிறோம்.''

அவ்வளவுதான்; தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

எங்களால் ஜீரணித்துக்கொள்ள முடியாமலிருந்த அந்தச் சில விநாடிகள் கழிய, அந்தக்குண்டின் அதிர்வு எங்கள் இதயங்களைத் தாக்கியது. ஜீவாவையும், ரஞ்சனையும், இறுதிவரை எங்களை இணைத்திருந்த அந்த 'வோக்கி'யையும் நாங்கள் இழந்துவிட்டோம்.



## லெப். கேணல் றீகன்

(இராசையா சிற்றம்பலம்)
வெல்லாவெளி,
மட்டக்களப்பு.
06-11-63 — 16-07-90

மட்டக்களப்பு - பாலையடி வெட்டையில், முன்னேறிவந்து நிலைகொண்டுள்ள படையினரைத் தாக்க புலிகள் திட்டமிட்டனர்.

கடைசி வேவு பார்த்து, இராணுவத்தின் பலம் - பலவீனத்தை அறிந்துவர, தளபதி றீகன் இன்னுமொரு போராளியையும் கூட்டிக்கொண்டு ஸ்தலத்திற்குச் செல்கிறான்.

இடைவழியில், இன்னொரு இராணுவ அணியை எதிர்பாராதவிதமாக எதிர்கொள்ள நேரிடுகிறது.

மோதல் வெடித்தது - றீகனுக்குக் குண்டடிபடுகிறது.

இவர்கள் இருவர்; எதிரியோ கும்பலாக இருந்தான். இயலுமானவரை பின்னால் வந்தார்கள். இரத்தம் ஓடிக்கொண்டே இருந்தது. ஒரு அளவுக்குமேல் றீகனால் நகரமுடியவில்லை.

கூடப்போன போராளியால், தளபதியை நீண்டதூரம் தூக்கிக்கொண்டு தப்பி ஓட முடியவில்லை. மிகவும் சிரமப்பட்டான்.

றீகன் சொன்னான்: ''இனி என்னால வர ஏலாது. நீயும் நிண்டால் சாக நேரிடலாம். ஆயுதங்களும் பிடிபட்டுவிடும்; என்னைவிட்டிட்டு, எல்லாத்தையும்கொண்டு நீ ஓடு.''

'மட்டக்களப்பின் போராட்ட வரலாற்றில் ஒரு தனி அத்தியாயம்; அந்தப் பிராந்தியத்தின் இரண்டாவது தளபதி. தன்னந்தனியனாகச் செத்துக்கொண்டிருக்க, எப்படி இடை நடுவில் அநாதரவாக விட்டுவிட்டுச் செல்லலாம்.....?' அந்தப் போராளி உறைந்துபோய் நின்றான்.

ஆனாலும் வேறுவழி எதுவுமே அற்ற நிலை.

தன்னிடமிருந்த எம் 16 கிரனேட் லோஞ்சரையும், இடுப்பில் கட்டியிருந்த பிஸ்டலையும் கழற்றிக்கொடுத்து - கருணா அம்மானிடம் சொல்லவேண்டிய சில இரகசியத் தகவல்களையும் காதோடு சொல்லிவிட்டு, குப்பியைத் தன் வாயில் செருகிக்கொண்டே, ''போட்டு வா'' என்று வழியனுப்பிவைத்தான் அத்தளபதி.

# தமிழர் திருநாள்!

அது வானமா?

இல்லை...... வரலாற்றுப் பெரு வெளியா? முகில்கள் தெரியவில்லை.

சுடர்கள் சில அசைந்தசைந்து தெரிகின்றன. ஆயினும் ஒருநாள் துகளாகப்போகும தாரகைகள் அவையல்ல!

ஆம், அவை வெறும் நட்சத்திரங்கள் அல்ல!

நித்திய வடிவுகொண்ட சத்தியங்கள் ஒளி வடிவாகி வருவதைக் காண்கிறோம் -

எங்கே? எதற்கு......?

நாம் காண்பது வானமா?

இல்லை! வரலாற்றுப் பெருவெளியேதான்!

மின்னலின் துகில் தரித்து இருள் நீக்கி வருகின்றனவே அவை - எம்மை நோக்கி - எம் மண்ணை நோக்கி -

ஏன்? எதற்கு......?

ஆம், தெரிகிறது! துன்பத்தை ஏற்ற இன்ப வடிவங்கள் எம் மண்ணைநோக்கி விரைந்து வந்துகொண்டிருக்கின்றன!

- அவை மனித இதயங்கள்! வரலாற்றில் மனித வடிவமாய் நின்ற இமயங்கள்!

வியந்தும் புகழ்ந்தும் இசை சூழ எம் மண்ணை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன!

பகல்போல ஒளிரும் விண்ணில் தெரிகிறது. அவை அழியாத திருமுகங்கள் என்பது! அவை வீரத்தைப் பதிப்பித்த நெஞ்சங்கள்!

மரணத்தை வென்ற -

மனித இதயங்கள்!

விடுதலையின் வித்தாகி, வாழ்வாகி வென்ற வரலாற்றுப் படிமங்கள் - வியப்பும் களிப்புமே வடிவாகி மீண்டும் இம்மண்ணிலே வலம்வந்து பதிகின்றன!

எதைப் பார்க்க ...? இந்த உவப்பின் வருகைக்குக் காரணம் யாது......?

இடுகாடு சுடுகாடு இங்கில்லையாம்!

ஆசையும் பயமும் சுயநல ஏக்கமும், மரணத்தை எண்ணி மடிந்த நோய்களின் நீடிப்பும் இங்கு - இன்று- இல்லையாம்! இவை மண்ணோடு மண்ணாக உட்சென்று புதைபட்ட பொருளாகி விட்டனவாம்! இதற்குப் பதிலாக -

அச்சம் அகற்றிய ஒளி! பகைவர்களைப் பொய் பல பேசவைத்த, பயந்தோட வைத்த, அனலின் ஒளி! விடுதலைப் போராட்ட அனல்!

வீரம்!

இங்கு -

பழைய இடுகாடு, சுடுகாட்டுப் பயத்திற்குப் பதிலாக-

மாவீரர் துயில் கொள்ளும் இல்லம் ஒளிர்கிறது!

துணிவு தெரிகிறது! தன்னலம் அகற்றிய இளம் தூயோர் துயில்கொள்ளும் இல்லம் தெரிகிறது! இங்கு துயில்வோர் -

தம்மை அனலாக்கிய இளம் தாமரைகள்!
மாற்றாரின் கைபடா மாணிக்கங்கள!

விடுதலையைவிட வேறொன்று வேண்டாத வைரங்கள்!

வரலாற்று மேலோர் இங்கு இவ்வேளை வருகை தந்திருப்பது வியப்பல்ல!

இது நொவெம்பர் 27 ஆம் நாள் -

தமிழீழத் தாய் உவக்கும் மாவீரர் நாள்!

வந்த இதயங்கள் இங்கு வணங்கி நிற்கின்றன.

''இவை மாற்றாரின் கைபடா மாணிக்கங்கள்! கவரிமான்கள்! இனத்தை அழித்தொழிக்க வந்த கயமைக் கொடியோரை அழித்தொழித்த விறல்கள்! ஆண் பெண் என்ற வேறுபாடகற்றிய வீரச் சுடர்கள்!'' என இவர்களது இதயம் நெகிழ்கிறது; வாழ்த்தி உயர்கிறது!

இந்த ஒளிமிகு நள்ளிரவில் மலர்கள் விரிகின்றன; வித்துக்கள் எழுகின்றன; விடுதலை வாழ்வு புலர்கிறது. ஆம்! இது தமிழீழத் தாயக விடிவின் உறுதி! எம் நெஞ்சத்தின் உறுதி!

இந்த மனத்திடை வாழும் மாவீரர் நன்னாளை, மண்ணும் விண்ணும் வரலாற்றுப் பெருவெளியும் மதித்து மகிழ்ந்து ஆயிரமாயிரம் வருடம் கொண்டாடும் என்பதில் ஐயமில்லை!

- நாக. பத்மநாதன்

# வீட்டுக்கு வேலி அல்ல.... நாட்டுக்கு எல்லை வேண்டும்!

ஒவ்வொரு மனிதனின் பிறப்புக்கும்
அர்த்தம் இருக்கிறது.
பிறப்புக்கும் இறப்புக்குமான இடைவெளிக்குள்
எல்லோருமே பூமியில் தாம் பிறப்பெடுத்ததை
அழியாத பதிவாக்கிவிட்டுப் போகமுடியும்.
ஆனால்...... அதிகமானவர்கள் முயற்சிப்பதில்லை.
சோம்பற் கதிரைகள் எம்மை எழும்பவிடுவதில்லை.
விறகாகும் மரங்களைப்போல
காய்ந்து, எரிந்து, சாம்பலாகி விடுகின்றோம்.
பூமிப் பந்தெங்கும் தெரிந்தவர்களாக......
ஒருசிலரே உயர்ந்து நிற்கின்றனர்
ஒரு தந்தை தந்தைக்குரிய கடமையை,
ஒரு தாய் தாய்க்குரிய பொறுப்பை,
ஒரு கணவன் கணவனுக்குரிய பணியை,
ஒரு மனைவி மனைவிககுரிய கடமையை,
விரும்பி ஏற்றுச்செய்து முடிப்பது போல

## உலைக்களம்

**வியாசன்**

ஒரு மனிதன் தன் மண்ணுக்குரிய கடமையை,
ஒரு தமிழன் தன் தாயகத்துக்குரிய பணியை
விரும்பி ஏற்றுச்செய்வது வெகுகுறைவு.
அன்னதான மண்டபத்தில்......
முதற்பந்திக்கு முன்னேறத் துடிக்கும் தமிழன்
இரத்ததானமென்றால் மட்டும்
தன்னை ஒட்டியுலர்ந்தவனாக
உருவகித்துக் கொள்ளுகின்றான்.
தாய் மண்ணுக்கு எல்லையிட வாருங்கள் என்றால்
எழுந்து வராத தமிழன்
தான் குடியிருக்கும் வளவுக்கு மட்டும்
ஐந்து வேலியும்
பன்னிரண்டு படலையும் போட்டு
இருபத்துநான்கு பூட்டும் பூட்டிவிட்டு
திறப்பை இடுப்பிலேயே வைத்திருக்கின்றான்.
இன்று தேவைப்படுவதெல்லாம்
நாட்டுக்கு எல்லையே தவிர
வீட்டுக்கு வேலியும், பூட்டுமல்ல......
தேவை ஏற்படும் போது மட்டும்
தேசம் எங்களை அழைத்துக் கொள்கிறது.
இன்று அன்னைபூமி அழைப்பு விடுத்துள்ளாள்.
இந்தக் ''காலத்தின் குரல்'' காற்றிலே பரவி
பிறவிச் செவிடர்களுக்குக் கூட
அதிர்வுகளை ஏற்படுத்துகின்றது.
தாய்நிலத்தின் வாழ்வும், தாழ்வும்
சேய்களாகிய எங்களுககே சேரும்.
எத்தனை காலத்துக்கு எங்கள் தேசம்
சிறைப்பட்டிருப்பது?
இன்னும் எத்தனை வருடங்களுக்கு
அன்னைமண் அழுதுகொண்டிருப்பது?
நாங்கள் பாதம்பட ஏறிமிதிக்கும்போது
மேனி சிலிர்த்துக் கொள்ளும் தாயகம்
எதிரி முத்தமிட்டாலும் ஏற்றுக்கொள்வதில்லை.
தன்பிள்ளைகள் சிறுநீர்கழித்தால்......
தீர்த்தத் திருவிழாவாகவும்
மலம்கழித்தால்...... சந்தனக் காப்பாகவும்
மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளும் தாயகம்
பகைவன் பன்னீர் தெளித்தாலும்
ஏற்றுக் கொள்ளுவதில்லை.
ஏன் தெரியுமா?
எங்களை தன்மடிதவழும் மழலைகளாகக் கருதுகின்றது.
எதிரி கட்டியணைத்தாலும் காறித்துப்புகின்றது.
ஏன் தெரியுமா?
ஆக்கிரமிப்பாளர்களை எந்தமண்ணும்
அங்கீகரிப்பதில்லை......
எங்கள் தாய்நிலத்தில்
மஞ்சள் நிறமாகப் பூத்துக் கிடக்கும்
ஆவரசம் பூவிற்கூட ஒரு அழகிருக்கிறது.
கத்தரிப்பூ வர்ணத்தில்
நாகதாளி பழுத்திருக்கும் போது எத்தனை எழில்
அரிவி வெட்டிய வயல்களில்......
முள்ளி பூத்திருக்கும்
அதுகூட நெஞ்சத்தைக் கிள்ளி எடுக்கும்.
கள்ளிச் செடிகளுக்கு அழகில்லையா?
ஏனில்லை.
எங்கள் மண்ணில் எதுதான் அழகில்லை.
இத்தனை வடிவையும் எப்படி இழப்பது?
எதிரியிடம் கொடுத்துவிட்டு எப்படிக் கிடப்பது?

பெற்றதாயை மற்றொருவன் எட்டி உதைக்கும்போது
சுமந்துபெற்றபிள்ளை சும்மா இருப்பானாகில்
அவன் பிள்ளையல்ல...... பிறவிக் குருடன்.
கட்டிய மனைவிக்கு இன்னொருவன் கைநீட்டும்போது
புருஷன் பார்த்துக்கொண்டு பேசாமல் இருப்பானாகில்
அவன் புருஷனல்ல ..... கோழை.
தாய்நிலத்தை பகைவன் தணலிலிடும்போதும்
பாய் சுருட்டி வைக்காதவன் மனிதனல்ல......
வந்த எதிரியை வாசலில் வரவேற்று
சந்தனம் கொடுப்பவன் தமிழனல்ல.
காலத்தின்குரல் காதுகளில் கேட்கும்போது
நாளநரம்புகள் துடிக்கவேண்டும்.
உலகமெங்கும் நிலவு ஒன்றுதான்
''அரியாலைக்கு'' மேலேறிவரும் நிலவுதான்
ஆபிரிக்காக் கண்டத்திலும் தெரிகிறது.
''கதிரவெளியில்'' பாற்குடம் சரிக்கும் நிலவுதான்
கனடாவிலும் காலித்து வருகிறது.
ஆனாலும் ..... அரியாலையில் பார்க்கும் நிலவும்
கதிரவெளியில் தரிசிக்கும் அதே நிலவும்தான்
எமக்கு அழகாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கிறது.
ஏன் தெரியுமா?
இது எங்கள் சொந்தமண்ணில் ஏறிவரும் நிலவு......

இந்த உணர்வோடுதானே
எங்கள் ''பிள்ளைகள்'' உயிர்கொடுக்கின்றனர்.
''புலிகள்'' ''பூநகரி''க்குள் புகுந்தபோது
அவர்களின் அடிமனதில் ஆர்ப்பரித்த
உணர்வு என்ன?
இது எம் தாய் நிலம்.
இது எம் அன்னை மடி.
இது எம்மைப் பெற்ற மண்.
இதில் எதிரி எப்படி ஏறி இருக்கமுடியும்?
என்ற கேள்வியே அவர்கள் மூட்டிய வேள்வி.
''பூநகரி''–
தமிழ்க்குறுநில மன்னர்களின் தலைநகரம்.
தன்னளவிலாவது தனியரசாக இருந்தபூமி.
சின்னவிரலாயினும்
வைரமோதிரம் அணிந்தவிரல்
''நாகதேவன்துறை''
தமிழரின் சின்னப் படகுத்துறை
பெரிய கப்பல்கள் வந்து போகவில்லைத்தான்
என்றாலும்
அச்சமில்லாது தானியமாவது ஏற்றிய துறை.
இந்த இடங்களை எப்படி எதிரியிடம் விடுவது?
என்றபடிதான் புலிகள் ஏறிப் பாய்ந்தார்கள்.
இந்த உணர்வு ... நெஞ்செல்லாம் பூத்து
எலலோருக்கும் என்று வருமோ
அன்று தமிழீழம்!